பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா }



வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0	
6 மாத சந்தா ,, ...	ரூ 1-12	
வெளி நாட்டிற்கு ,, ...	ரூ 4—0	

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ.	8.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ.	2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விஸ்தம்	

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஞு அற்பிசி மீ 28 உ (13—11—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 29.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று லகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,

முதலியார் பேட்டை, புதுச்சேரி

உடனே தேவை.

"அபூர்வ சம்பாத்ய முறைகள்" என்ற ஆச்சரியமான புஸ்தகத்தைப் படித்து முடிந்ததும் உடனே சம்பாதிக்கத் தொடங்கலாம். விசேஷ நற்சாக்ஷிகள் பெற்ற மிக்க உபயோகமான அரிய நூல். பிரதி காப்பி விலை அணா 12. வி. பி. செலவு பிரத்தியேகம். ஆர். சேஷன், எடிடர், ஸ்ரீரங்கம் போஸ்டு, (திருச்சி) தென் இந்தியா,

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும் தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

"அறிவு விளக்கம்"

ஓர் மாதாந்தரிப் பத்திரிகை

வருட சந்தா தபாற்கூலி உள்பட 6 அணா

மாதிரிப்பிரதி இனாம்,
அறிவுவிளக்கம் ஆபீஸ்
உடுமலைப்பேட்டை.

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட விபாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு.

சேலம் ஜில்லா மூன்றாவது
அரசியல் மகாநாடு.

வரவேற்புக் கழகத்தலைவர்
திருவாளர்
எஸ். தம்மண்ண செட்டியார்
அவர்களின்
உபன்யாசம்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

இம்மகாநாட்டின் வரவேற்புத் தலைமைப் பதவியான பெரும் பாக்கியத்தை யெனக்களித்திருக்கிறீர்கள். அன்பின் காரணமாக நீங்கள் எனக்களித்த கட்டளையை மறுக்கப் போதிய தைரிய மில்லாமையால் இதனை யேற்றுள்ள எனக்கு உங்கள் பூரண ஆதரவுகள் உற்ற துணையாக விருக்குமென்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை. வரவேற்புக்கழகத்தின் சார்பாகவும், சேலம் நகர மகா ஜனங்களின் சார்பாகவும் உங்களை அன்புடன் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் வரவு நல்வரவாகுக.

இங்கு வந்திருக்கிறவர்களுடைய பெருமைக்குத்தக்கவாறு நாங்கள் விரும்பியபடி தகுந்த உபசாரம் செய்துகொடுப்பதில் ஏற்படும் குறைகளை மன்னிப்பீர்களாக.

இம்மகா நாட்டைத் திறந்து வைப்பதற்குப் பன்முறையும் மன்றாடி கேட்டதற்கு முதலில் முழுமனதோடு இசைந்த மகாத்மா காந்தி பின்னால் வரமுடியாமையைக் குறித்துப் பெரிதும் வருந்துகிறோம். மகாநாட்டில் கத்தருக்காகவென்று அவருக்கு ஒரு பணமுடிப்பு கொடுப்பதாக தீர்மானித்திருந்தும் சிலரின் அந்தரங்க சூழ்ச்சிகளின் காரணத்தாலே இந்நகர்க்கு அவர் வரமுடியாமையைக்குறித்து வருந்துகிறோமே ஒழிய அவர்மீது குறை கூறுகின்றோம் இல்லை. காரணம் எதுவாயினுமாகுக. சமத்துவம், சகோதரத்வம், கதர், தீண்டாமை முதலிய பல முக்கிய விஷயங்களைப்பற்றிய அரிய சொற்பொழிவுகளை அவரிடமிருந்து நாம் இழந்தது பெரும்பாலும் வருந்தத்தக்கதேயாம்.

காங்கிரஸ்.

தேசிய முன்னேற்றத்தைக்கருதி அமைக்கபெற்ற காங்கிரஸ் சபைக்கு நல்ல யோக்கியதை ஒரு காலத்தில் இருந்தது. உண்மை தேசபக்தியும், உறுதியான நெஞ்சமும் களங்கமற்ற மனமுமுடைய பெரியோர்களும், சுய நலங்கருதா உத்தமர்களும் உழைத்துவந்த காலத்தில் அஃது சிறப்புற்றோங்கியது. நாளடைவில் அந்த யோக்கியதைக்குக் காரணமாய் இருந்த நிர்மாண திட்டங்களை அது நழுவவிட்டது. உண்மைத் தலைவர்கள் அதனை விட்டு நீங்கினர். ஒரு குறிப்பிட்ட வகுப்பினராகிய சுயநலப் புலிகள் அதனைப் பின்னால் கைப்பற்றி அதன் பெயரால் தங்களுடைய வகுப்பின் முன்னேற்றத்திற்காகவும், தங்களது பிறப்பின் உயர்வை நிலை நிறுத்துவதற்காகவும், பொது மன்றங்களில் இடம் பெறுவதற்காகவும் பாடுபடத் தலைப்பட்டனர். இதனை விளக்குவதற்கு உதாரணங்கள் எடுத்துக்காட்ட வேண்டிய நிலைமை மாறிவிட்டது. இதனுடன் நில்லாது மற்ற இயக்கங்களின் நோக்கங்களைப்பற்றி இதர மாகாணத்தார்க்குத் தப்பிதமாக எடுத்துக்காட்டவும் அஞ்சினார் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில், கோயம்புத்தூரில் கூடிய பார்ப்பனரல்லதார் மகாநாடு ஜஸ்டிஸ் இயக்கத்தினரும் காங்கிரசில் சேரலாமென தீர்மானித்தது. அந்தத் தீர்மானப்படி ஜஸ்டிஸ் இயக்கத்தால் பெரும்பான்மையோர் காங்கிரசில் சேர்ந்த முறையில் நமது ஜில்லா மற்ற ஜில்லாக்களுக்கு வழிகாட்டியாயிருத்தலைக் குறித்து நம்மில் மகிழாதார் ஒருவருமில்லையென உறுதியாகக் கூறுவேன்.

நமது கடமை.

காங்கிரஸ் சபையில் நம்மனோர்கள் எல்லோரும் சேர்ந்து அதனைக் கைப்பற்றுவதற்கு முயலுதல் வேண்டும். இராஜீய, சமய, சமூக, சிக்கல்கள் ஏற்பட்டுள்ள இச்சமயத்து நாம் இங்கு கூடியுள்ளோம். விஷயங்களை ஆராய்ந்து பார்த்து உறுதியான கொள்கைகளுடன் நல்ல முடிவுக்கு வரவேண்டிய பொறுப்பு உங்களைச் சார்ந்ததாகும். சமாதானமாகவும், நியாயமாகவும் சுயராஜ்யத்தை யடைவதே நம்மனோரது முதன்மையான கொள்கையாகும். வகுப்புவாரி தருமமும், சம உரிமையுமே நமது நோக்கமாகும். மதத் துவேஷங்களையும், மதத்தின் பேரால் செய்யப்படும் அர்த்தமில்லா வீண் சடங்குகளையும் அறவேயொழிக்க முயலவேண்டும்- சுயமரியாதை தத்துவத்தை நாடெங்கும் பரவச்செய்தல் வேண்டும்.

மனிதருக்குள் வேற்றுமைகளை யுண்டு பண்ணும் மதக்கிரந்தங்கள் சட்ட மூலமாக தடுக்கப்படவேண்டும். கிரிமினல் சட்டங்களைப்போல சமதிருஷ்டியுள்ள சிவில் சட்டங்களை அமையச் செய்தல்வேண்டும். சிவில் நீதி பரிபாலனத்தில் மநுநீதியையும் வழக்கம் என்னும் கொடிய விதியினையும் உபயோகித்து வருதலைக் கண்டனம் செய்தல் வேண்டும். பிராமணர், பிராமணரல்லாதார் என்னும் வேற்றுமைகளைக் கற்பிக்கும் மநுநீதியை நீக்குதல்வேண்டும்.

முட்டுக் கட்டைகள்.

உங்களது கடமைகளைப் புரிவதில் இடையூறுகள் பல ஏற்படும் எனினும் அவ்விடையூற்றுக்கு இடையூறாய் நின்று ஒவ்வொருவரும் அஞ்சா நெஞ்சத்தோடு உழைக்க வேண்டுவது அவசியம். உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதினும் அச்சமின்றி அமைதியோடு முயலுங்கள். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் அன்றோ?

நன்மையை யடையவேண்டுமாயின் சிறிது துன்பங்களை யிடையில் அநுபவித்தே தீரவேண்டும். ரோஜாப்பூவை செடியினின்று அறுக்கமுயலுபவன் அதன் முட்களால் தைக்கப்படுவது சகஜமே. தேன் கூட்டினின்றும் தேனைச் சேகரிக்க விரும்புவோன் தேனீக்களால் கொட்டப்படுவதும் இயல்பே. தொன்று தொட்டும் பல துறைகளையுங் கைப்பற்றி மேம்பாடடைந்து வந்தோரை இன்று விலகி இருங்கள் என்றால் அவர்கள் இடுக்கண் விளைவிப்பதும் இயற்கையே. அவைகட்குப் பின்னிடாது உழைத்தலே நமது கடமையாம்.

ஓங்கி வளரக்கூடிய ஒவ்வொரு இயக்கத்திற்கும் எதிர்ப்பும் முட்டுக்கட்டையும் அத்தியாவசியமெனவே கருதுகிறேன்: உதாரணமாக ஒரு விதையை இம்மேஜையின்மீது வைத்து நெடுநாள் காப்பாற்றிவரினும் முளைத்துச்செடியாகாது. பூமியில் புதைத்தபின் மண், நீர் முதலியவைகளின் எதிர்ப்பை வென்று, முளைத்து மேல் கிளம்பி செடியாகக் காணப்படுகிறது. பூமியின் எதிர்ப்பை வென்று வேர்கள் பரவுகின்றன. இதைப்போலவே, முட்டுக்கட்டைகளும் எதிர்ப்பும் இருந்ததினால் தான் தலைவர்கள் சுயமரியாதை என்னும் கடல் பொங்கிக் கொண்டிருக்கிறது- அதில் மநுவும் அவரது வருணாசிரமக் கப்பலும் மூழ்குங்காலம் நெருங்கி விட்டது- கும்பகோணம் வைதீகர்கள் கூச்சல்போடினும் மநுவை அணுவளவும் காப்பாற்ற முடியாது.

வருணாசிரமமும் காங்கிரசும்.

வருணாசிரம அதர்மம் நம் நாட்டில்பல நூற்றாண்டுகளாக அநுசரிக்கப்பட்டு வந்தது உண்மையே. அதனால் மேல் ஜாதியார் என்று சொல்லப்பட்டவர்கள் அநேகபலன்களை யடைந்துவந்தனர், அதனால் நம் தேசமே சீரழிந்து போய்விட்டதும் உண்மையே. வருணாசிரமமும், புரோகிதமும் நம் மக்களை அடிமைகளாக்கி அல்லலில் புகுத்தின. இப்பொழுதோ காலம் மாறி விட்டது. பழயன கழிதலும், புதியன புகுதலையும் மாந்தர் எதிர்பார்க்கின்றனர்- பழைய குருட்டு வழக்கங்களைக் கோருபவர்கள் பழைய மனிதர்கள் இருக்கும் இடத்தைத் தேடிச் செல்வதற்குத்தகுந்தவர்களே யொழிய புதிய மனிதர்களிடையிலிருந்து வாழத்தகுதிபெற்றவர்கள் அல்ல என்னும் உணர்வு எல்லோருக்கும் வந்து விட்டது. தமிழ் மக்கள் கண்விழித்துக்கொண்டனர். இனி வருணாசிரம அதர்மம் எவ்வாறு நிற்கும்? மகாத்மா காந்தி புதியதோர் வருணாசிரம தர்மத்தைப்பற்றி பேசவந்தனர். அஃது வைதீகர்களுக்கு மாத்திரமல்லாமல் லௌகீகர்களுக்கும் வெறுப்பை உண்டாக்கியது வெள்ளிடைமலை. இஃது எத்திறத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஒரு திறத்தாராலும் ஆதரிக்கப்படவில்லையாதலால் இதனை விட்டொழித்து மேல் செல்லுவோமாக.

சென்னை காங்கிரஸ் பந்தலில் வருணாசிரம மாகாநாடு ஒன்று கூட்ட பலர் முயற்சிசெய்து வருவதாக பத்திரிக்கையின் மூலமாய் அறிந்தேன். அஃது உண்மையான், காங்கிரஸ் மகாசபைக்கு என்றும் தீராத வசையை உண்டுபண்ணுவதற்கு இது ஒன்றே போதுமானது- காங்கிரஸ் என்பது சமத்துவத்திற்குப்போராடும்சபை- அதில் வருணாசிரம மகாநாடு கூட்டுவதைககாட்டிலும் வேறே மோசடி உண்டா என்றுதான் கேட்கிறேன்- இத்தகையசெய்கையைக் கண்டிப்பீர்களென பெரிதும் நம்புகிறேன்.

இதன் தொடர்ச்சி 15 பக்கம் பார்க்க

சங்கராச்சாரியாரும் சம்மத வயதுச்சட்டமும்.

கைவல்ய சாமியார் எழுதினது.

சங்கராச்சாரியாருக்கு, கலியாணசம்மதவயதைச் சட்டமாக்கக் கொண்டுவந்திருக்கும் மசோதாவை பற்றி ஏதாவது தெரியுமா? அதைப்பற்றின லாப நஷ்டம் அறைக்குள் அடங்கிக்கிடக்கும் மடத்து சந்நியாசிக்கு என்ன தெரியும். இந்து சாஸ்திரங்களின் அநேக பிரிவுகளில் ஒரு பாகமாகிய அத்துவித சாஸ்திரத்தை நிச்சயப்படுத்தின சங்கருக்கும் இதற்கும் சம்மந்தமென்ன? கர்மகாண்டத்திலும் அவருக்குச் சம்மந்தமுண்டு என்று அநேகர் ஆட்சேபித்தாலும் பாப்பார ஜாதியாருக்கு சிறப்புவகையில் அமைந்துள்ள ஆசார அநுஷ்டான ஆகார வியவஹாரவிவாகாதி முறைகளைப் போதிப்பதாகும் கர்ம காண்டம், இவை சுருதிகளால் பிரதிபாதிக்கப்பட்டன வல்லவென்பது இவருக்குத் தெரியாதா? கர்ம காண்டத்தால் ஏற்பட்ட வியவஸ்தைகள் இவருடைய ஞானபாகத்தோடு கலந்திருப்பதாக பக்கத்திலிருப்பவர்கள் சேர்த்துக்கொண்டு ஆங்காங்குள்ள சங்கரார் சொன்ன சுலோகங்களை கர்ம காண்டத்திற்கு அனுசரணையாக பாப்பான் அர்த்தம் பண்ணி, தான் செய்யும் புரோகிதத் தொழிலுக்கு பிரமாணப்படுத்தி சமஸ்கிருதம் தெரியாதவர்களை ஏமாற்றுவதைத் தவிர சங்கருடைய அத்துவைத மதத்திற்கும் கர்ம காண்டத்திற்கும் சம்மந்தமென்ன? ஸ்மிருதிகளும் புராணங்களும் அத்துவைத சாஸ்திரப் பிரமாணங்களுக்கு தள்ளப்பட்டவை என்றும், காலந்தோரும் மாறக்கூடியவை என்றும், சங்கரர் சொன்னதும் சுருதிகளின் உண்மையாயுமிருக்கையில், 12 வயதுக்குப் பின்பெண்ணுக்கு கலியாணம் செய்தால் மதம் கெட்டுப்போகுமென்று இப்பொழுதிருக்கும் சங்கராச்சாரியார் வைசிராயிக்குத் தந்திகொடுப்பது எவ்வளவு ஞாயத்திற்கு விரோதமாக விருக்கிறது என்பதை நீங்களே ஆலோசித்துப் பாருங்கள். ருதுவான பின் கலியாணமாகிப் பிறக்கும் குழந்தைகளால் இந்துமதம் கெட்டுப்போவதாயிருந்தால், வியாசர் மீன்வாணிச்சிக்கும், வசிஷ்டர் ஊர்வசிக்கும், பராசரர் புலச்சிக்கும் பிறந்திருக்கிறார்கள். இவர்கள் தாய்மார்களெல்லாம் ருதுவாகியும் கலியாணமில்லாமல் அநேகநாள் பொறுத்தே இவர்களைப் பெற்றிருக்கிறார்கள். இதனால் இந்துமதம் கெடவில்லையே. இந்த ரிஷிகளே இந்துமதத்தின் விதிகர்த்தாக்களாகவும் அதற்கு ஆணிவேர்போன்றவர்களாகவு மிருக்கிறார்கள். இனியும் கவனித்தால் மனிதனல்லாத மற்றப் பிராணிகளிடமிருந்தும் மகா ரிஷிகள் பிறந்திருக்கிறார்கள். ரிஷ்ய சிருங்கர் மானிடமிருந்தும், கௌசிகர் குசத்திலிருந்தும், ஜம்புகர் நரியினிடமிருந்தும், வால்மீகர் புற்றிலிருந்தும், கௌதமர் முயலிடமிருந்தும், அகஸ்தியர் கலசத்திலிருந்தும் பிறந்தார்கள். இவர்களெல்லாம் இந்துமதத்தை நிலைநிறுத்தினவர்களாகக்கருதப்பட்டார்களே ஒழிய இவர்களால் இந்து மதம் கெட்டதாகக் காணோம். இப்படி இருக்கையில் 12 வயதிற்கு மேற்பட்டு கலியாணம் செய்தால் இந்துமதம் கெட்டுப்போய்விடுமென்று சொல்லுவதற்குக் காரண மென்ன? புஷ்டியும் திடகாத்திரமுமுள்ள ஆண்பெண்களுக்குப் பிள்ளை பிறந்து மதத்தையும் தேசத்தையும் கெடுத்ததாக எந்த சரித்திரத்திலுமில்லை. தேக வளர்ச்சி பூரணமடைந்து கொழுத்துப் பூரிப்படைந்த பெண்களிடமே நம் தேசத்துப் பெரியவர்களும் ரிஷிகளும் வீரர்களும் பிறந்ததாக சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பழய புராணங்களில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டாத விஷயங்கள் அநேகமிருக்கின்றனவென்று யுக்தி பிரமாணமாக எடுத்துக் காண்பித்தாலும் மதப் பித்தர்களும் அவர்களுடைய கோஷ்டியாரும் இந்துமதம் கெட்டுப்போய்விடுமென்று கூச்சல் போடுகிறார்கள். இவர்கள் ஏன் இத்தனை பிடிவாதம் சாதிக்கிறார்களென்றால், சிலர் விஷயங்களை ஆழ்ந்து யோசிக்க சோம்பல் கொண்டுவிடும் சுபாவமும், சாஸ்திரிகள் சுலோகஞ் சொல்லும் பல புத்தகக் குறிப்புகளோடு கூடின ஏட்டிலுள்ள எந்த விஷயத்தையும் நம்பின பழக்கமும், மதச்சீர்திருத்தத்தினால் மதத்தின் புரட்டு குறைந்து தங்கள் உயர்வும், பிழைப்பும், வெட்டிச்சோறும் போய்விடுமே என்கிற கூட்டத்தில் நெருங்கின பழக்கமும், இவர்களை முன்னேறக்கிச்செல்லச் செய்வதில்லை. மத உண்மையை ஜன சமூகம் தெரிந்து தங்கள் பேரிலுள்ள மதிப்புக் குறைந்துவிடுமோ என்கிற கவலையே வைதீகர்களுக்கு. இவர்களுடைய மற்ற உலக விவகாரங்களில் மதத்தின் ஆசார அனுஷ்டானங்களைப் பின்பற்றுவதுமில்லை. உண்மையான சாஸ்திர அறிஞர்கள் உண்மையறிவதிலேயே நாட்டம் கொண்டிருப்பார்கள் இதுதான் அவர்களுக்குற்ற பேரானந்தம். அறியாமை, மந்திரம், பயம் முதலியவைகளை அப்புறம் தள்ளும் ஆண்மை பெற்றவர்களு மவர்களே

கடைசியாக ஆதி சங்கரருக்கு உபதேசம் பண்ணின குரு பறையனே.

ஆதி சங்கரருக்கு வருணாசிரமத்தின் அக்ஞானம் நீங்காமையால் காசி விஸ்வநாதரே பறையனாக வேஷமெடுத்து வருணாஸ்ரம அக்ஞானத்தைத் தீர்த்து ஞான உபதேசம் செய்தாரென்பது ஆதிசங்கராச்சாரியின் சரித்திரத்திலுள்ளகதையே ஒழிய நானாக எழுதுவதன்று. பரமசிவன் சண்டாள வேஷம் தாங்கி காசிப் பட்டணம் வழியாக போய்க்கொண்டிருந்த சங்கராச்சாரியின் முன் தோன்ற சங்கரர் பார்த்து "ஏ சண்டாளா, விலகிப்போ' என்று சொல்லினர். அப்பொழுது சண்டாள வேஷம் தரித்திருக்கும் பரமசிவன் சொல்லுகிறார்" ஏ சந்நியாசி நான் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதில் சொல்லக்கடவாய். அன்ன விகாரமாகிய உன் சரீரத்திலிருந்து அன்ன விகாரமாகிய என்சரீரத்தை விலகும்படிசொல்லுகிறாயா? அல்லது சைதன்னிய சொரூபமான உன் பிரத்தியகாத்மாவிலிருந்துபிரத்தியகாத்மாவைவிலகிப்போவென்று சொல்லுகின்றாயா? உன் சரீரமெப்படி அன்னமய கோசத்தினால் உண்டாயிற்றோ அது போலவே என் சரீரமும் அன்னமய கோசத்தினால் உண்டாயிற்று. ஆதலால் இரண்டு சரீரங்களும் ஒன்றாயிருக்க உன் சரீரம் சுசியானதும் என் சரீரம் அசுசியானதும்என்று எம்படிச் சொல்லலாம்என் சரீரம் அசுசியென்றால் உன்சரீரமும்அசுசியானதே ஆகலால்சரீரத்தைப் பார்த்துவிலகியிரு என்று சொல்லுவது யுக்தமானதன்று.நம்மிருவருடைய சரீரமும் அசுத்தமே. நீ தெரிந்த சாஸ்திரங்களிலிருந்து இதை ஏன் மறந்தாய்.

பிரபஞ்சமெல்லாம் மாய சொரூபமாயிருக்கின்றது, ஆதலால் ஒரே விதமாயிருக்கும் சரீரங்களைக் குறித்து அபிமானம் வைக்கலாகாது. சைதன்னிய சொரூபமான பிரத்திய காத்ம சொரூபம் உன் சரீரத்திலும் என் சரீரத்திலும் இதர 5 பிபீலிகாதி சரீரத்திலும் ஒரே விதமாயிருக்கின்றது. இது விஷயத்திலும் நீர் சொன்னது சரியில்லை. துக்க மயமாகிய அகங்காரங்களுக்கெல்லாம் வேறாயிருந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும் பிரமத்துடன் சேர்ந்திருப்பவனுக்கு அலைகளில்லாத சமுத்திரம் போல சங்கல்ப விகல்பங்களில்லாமல் இவன் பிராமணனென்றும் இவன் பறையனென்றும் பேதபுத்தி எங்கிருந்துண்டாயிற்று? ஆத்ம வஸ்துவில் எவன் பேத புத்தியுடன் பார்க்கிறானோ அவன் ஜனன மரண ரூபமாயிருக்கும் சம்சாரத்திலிருந்து விடபடமாட்டான். எங்கும் நிறைந்த ஆத்மாவானது அகண்டானந்த ரூபமாய் ஞானத்தினால் பிரகாசித்து சர்வ காலத்திலும் ஆனந்தத்துடன் கலந்து ஒன்றாயிருக்கும். பரபிர்ம்மம் அப்படிப்பட்ட பரபிர்மத்திற்குப் பேதபுத்தியுண்டென்று எப்படி சொல்லலாம்" என்று பறைய வேடதாரியான பரமேஸ்வரன் சொன்னார்.

பறையன் வேஷம் தரித்திருந்த பரமசிவனது வார்த்தையைச் சங்கராச்சாரியார் கேட்டவுடன் வருணாசிரமத்தில் அபிமானமில்லாதவனாய், அவர் முன்னால் நின்ற பிராமணர்களைப் பார்த்து அவர்களுக்கு சமாதியில்லாமலே வருணாச்சிரமாபிமான நிவர்த்திக்காக நிஜ சொரூபமாகிய பிர்ம்மைக்யானுபவத்தை அடைவதற்கு ஐந்து சுலோகங்களால் தனது அக்ஞானம் நீங்கினதை உபதேச ரூபமாக விளக்கினார். அந்த ஐந்து வியாக்கியானங்களையும் எழுதினால் வியாசம் விரிந்து விடும். சுருக்கிச் சொல்லுகிறேன்.

"நித்தியமானதும் சுத்தமானதும் அசங்கியமானதுமாகிய ஆத்ம ஞானத்தினால் ஜாதி குலம் என்னும் எந்த அபிமானமுண்டோ அந்த அபிமானமெல்லாம் நசித்துப் போவதால் அவன் சண்டாளனாயிருந்தாலும் பரிசுத்தமுடையவனே. அப்படி இல்லாதவன் பிராமணனாயிருந்தாலும் சண்டாளனே.

ஜாக்கிர ஸ்வப்பன, சுஷுப்தி, யவஸ்தைகளிலும், எந்த ஆத்மசைதன்யம் ஸ்பஷ்டமாகப் பிரகாசித்துக்கொண்டு பிரமதேவன் முதல் பிபீலிகாதி சகல சராசர சரீரங்களுக்கும் ஜகத்திற்கும் எது சாக்ஷியாக விருக்கின்றதோ, அந்த ஞான சொரூபமாகிய பரமாத்மா நானே ஒழிய, காணப்படும் பதார்த்தங்கள் நானல்ல என்னும் திடஞானம் எவனுக்குண்டோ, அவன் சண்டாளனாயிருந்தாலும், எனக்கு பரம குருவே, அதில்லாதவன் பிராமணனாயிருந்தாலும் சண்டாளனே.

இந்த பிரபஞ்சமெல்லாம் ஜீவேஸ்வர ரூபமாய் சத்துவகுண, ரஜோ குண, தமோகுணங்களுடன் கூடி, சுகரூபனாயும் நாசரகிதனாயும் சுயம்பிரகாசனாயும் இருக்கும் பரபிர்மத்தில் எவன் புத்தியை திடமாக நிறுத்துகின்றானோ, அவன் சண்டாளனானாலும் எனக்கு குருவே, அதல்லாதவன் பிராமணனானாலும் சண்டாளனே.

எவன் நித்தியமாயும் நிர்மலமாயும் இருக்கும் பரபிர்மமே நான் என்று நினைத்து காணப்படும் திருசியமாகிய ஜீவேசுவராதி பிரபஞ்சத்தை மாயை என்று எண்ணுகின்றானோ அவன் எவனானாலும் சரி அவனே என் குரு. மற்றவன் பிராமணனேயாயினும் சண்டாளனே." இதை சொன்னதும் பற வேஷம் தாங்கிவந்த பரமசிவன் மறைந்து விட்டார். சங்கரரும் அவர் சிஷியர்களும் வருணாசிரம அக்ஞானம் தீர்ந்து தீண்டாமைப் பேயும் தொலைந்து, அத்துவைதமதத்தை எல்லா இடத்திலும் ஸ்தாபித்தார்கள் என்பது சங்கரர் சரித்திரம். இப்பொழுது அந்த மதஸ்தர்களே தீண்டாமையை நிலைநிறுத்த ஆணிவேர் போன்றிருக்கிறார்கள். சங்கரரைக் குருவாகக் கொண்டு, ஊர் ஊராய் பணம் சேகரித்துக் கொடுப்பதும், அவர் சுலோகங்களை சொல்லுவதும், அதற்கு அர்த்தம் பண்ணித் தன்னை பிராமணனென்று மதித்துக்கொண்டு, பண்ணாத பாவங்களுக் கெல்லாம் ஏதுவாயிருந்து தொழிலைச் செய்து ஜீவித்தலும், தீண்டாமை இந்துமதத்திலிருந்து போகவேண்டுமென்று சொன்னால், மதம் கெட்டுப்போய் விடுமென்று கூச்சல் போடுவதுமே சங்கரர் மதமாயிருக்கிறது. எந்தமதமெப்படி யிருந்தாலும், தீண்டாமையை ஒழிக்க சக்தியில்லாவிட்டாலும், பார்ப்பனர் தம் லௌகீக ஆசையைத் தீர்த்துக்கொள்ள படுகின்ற பாடும் காப்பிக்கடையும் தீண்டாமையைத் தீர்த்துக்கொண்டுதான் வருகிறது.

ஸ்ரீமதி காதரைன் மேயோ

"இந்தியமாதா" என்னும் புத்தகத்தில் பஞ்சமரைப் பற்றி எழுதுவது

பஞ்சமர் துயரம்.

பிரிட்டிஷ் அரசாட்சி இந்தியாவிற்கு வந்து இவ்வளவு காலமாகியும் ஏன் நம்மில் 100 க்கு 92 பேர்கள் கல்வி கற்காதவர்களாயிருக்கவேண்டும். இதற்கெல்லாம் பிரிட்டிஷ் அரசாட்சியே ஜவாப்தாரியென இந்திய அரசியல் வாதி ஒருவர் உறக்கக் கத்துகிறார்.

எல்லாவற்றிற்கும் பிரிட்டிஷாரே ஜவாப்தாரியென வெகு இலகுவாக அவர் கூறி விடுவார். அயல் தேசத்தார் இந்தியர்களை நிறவேற்றுமையுடன் நடத்துகிறார்களென இந்திய அரசியல் வாதிகள் சொல்லுகின்றனர். ஆனால் இந்தியாவில் கோடிக் கணக்கான ஜனங்களை கல்வியில்லாதவர்களென்றும், தீண்டாதவர்களென்றும், ஒதுக்கிவைத்து அவர்களை மிக இழிவாக நடத்துவதற்கு அவர்கள் என்ன சமாதானம் கூறுகிறார்கள். தன்தேச மக்களுக்கே, தன்சகோதரே, சகோதரிகளுக்கே, சாதாரண பிறப்புரிமைகள் கூட வழங்குவதற்கு விருப்பமில்லாத அரசியல் வாதிகள், பிறதேசத்தார் தங்களிடம் நிறவேற்றுமை காண்பிக்கிறார்கள் என்று குறை கூறுவதால் என்ன பயன்?

பல்லாண்டுகளுக்குமுன் தற்பொழுதுள்ள ஹிந்துக்களின் முன்னோர்கள் முதன் முதலில் இந்தியாவுக்கு வந்த பொழுது கருநிறமுள்ள திராவிடர்களைக் கண்டனர். தாங்கள் சிறிது வெளுப்பு நிறத்தவர்களாயிருந்தபடியால் கரு நிறத்தவர்களான திராவிடர்களுடன் கலக்கக்கூடாதென எண்ணி திராவிடர்களை அசுத்தமானவர்களென்றும், தீண்டப்படாதவர்களென்றும் ஒதுக்கி வைத்துவிட்டனர். சின்னாட்களுக்குப் பிறகுவருணாசிரமம் என்ற ஒரு நூதன பிரிவினையை அவர்கள் தோற்றுவித்து, தாங்களே எல்லா ஜாதியிலும் உயர்ந்தவர்கள், தாங்கள் பூதேவர்கள், பிராமணர்கள் என்று கூறினர். இன்னும் சிலரை க்ஷத்திரியர்கள் அல்லது யுத்தம் செய்பவர்கள் என்று பிரித்தனர், வைசியர்கள் அல்லது விவசாயம் செய்பவரென ஒரு கூட்டத்தாரை அவர்கள் நியமித்து, பிராமணன், க்ஷத்திரியன் இவ்விருவர்களுக்கும் வைசியன் கீழ்ப்படிந்து வேலை செய்ய வேண்டுமென்றும் கூறினர். நான்காவதாக, மேற்கூறிய மூன்று வகுப்பாருக்கும் கீழ்ப்படிந்து, அவர்களுக்கு வேலைக்காரர்களாக ஒரு சமூகத்தாரிருக்க வேண்டுமென்றும் கூறி இவர்களுக்குச் சூத்திரர்கள் எனப்பெயரிட்டனர். இவர்களுக்கெல்லாம் தாழ்ந்தவர்களென ஒரு சமூகத்தாரை ஏற்படுத்தி, அவர்களை தீண்டப்படாதார்களென ஒதுக்கி வைத்தனர்.

பாகவதத்தில், ஒரு பிராமணன் கொலையுண்டதைப்பற்றி எழுதுகையில் அடியில் வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—

பிராமணனைக் கொலைசெய்யும் எவனும் அவன் இறந்தபின்பு, புழுவாகவோ, அல்லது பூச்சியாகவோ தான் அடுத்த ஜென்மத்தில் பிறப்பான். பலதடவை புழு, பூச்சிமுதலியஜென்மங்களை எடுத்து, அதன்பின் அவன் மனிதனாய்ப் பிறப்பானானால் அவன் பறையன் என்ற ஜாதியிலே பிறப்பான். அப்படிப் பிறந்தாலும், நாலு ஜென்மத்திற்கு அவன் குருடனாகவே பிறப்பான். ஆயினும் அவன் செய்த பாவத்தை ஒழிக்க வேண்டுமாயின் 40000 பிராமணர்களுக்கு பிராமணபோஜனம் செய்விக்க வேண்டும். இந்த விதமாகத்தான் தீண்டாதார், அல்லது பஞ்சமர் என்ற ஒரு வகுப்பார் இந்தியாவில் தோன்றினார்களெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மேல்ஜாதியார் எனப்படுவோர் விளைக்கும் இன்னல்களுக்கு அளவு கிடையாது.

ஒரு பிராமணர் ஒரு 'சூத்திர'னைக்கொலைசெய்துவிடுவானானால் அந்த பாவத்தை நீக்குவதற்கு பிராமணன் 'காயத்திரி' மந்திரத்தை நூறு தரம் உச்சரித்தால் போதுமானதென பிராமணனுடைய சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பண்டைக்காலத்தைப் பற்றிப் பேசுவானேன். தற்பொழுது தீண்டப்படாதவருடைய நிலைமையென்னவென்பதைச் சற்று நோக்குவோம்.

தீண்டப்படாதவர்களென ஒரு சமூகத்தாரை ஒதுக்கிவைத்து, அவர்களை இந்துக்கள் மிகவும் கேவலமாக நடத்திவருகின்றனர். தீண்டப்படாதவர்களை மிக இழிவான தொழில்களைச் செய்யும்படி அவர்கள் ஏவுகின்னர்.

தீண்டப் படாதவர்களில் பலர் தோட்டி வேலைகளைச் செய்து வருகின்றனர். அவர்களை கல்விகற்க அனுமதிப்பதில்லை. இந்துவேதங்களையும், சாஸ்திரங்களையும் அவர்கள் கண்ணால் கூட பார்ப்பது கூடாதென இந்துக்கள் கூறுகின்றனர். பிராமணன் எவனும் தீண்டாதவர் வீட்டிற்குச் சென்று புரோகிதம் செய்யமாட்டான். ஹிந்து ஆலயங்களுக்குள் தீண்டாதார் செல்வதற்கு உரிமை யில்லை. தீண்டாதவர்களுடைய மக்கள் பொதுப் பள்ளிக்கூடங்களுக்கு செல்லக்கூடாது. பொதுக்குளங்களிலிருந்தோ, கிணறுகளிலிருந்தோ, அவர்கள் தண்ணீர் எடுக்கக்கூடாது. குடிதண்ணீர் கிடைக்காவிட்டால் அவர்கள் உயிர் துறக்கதேண்டியதே தவிர பொதுக்குளங்களிலிருந்து தண்ணீர் எடுக்கக்கூடாது.

நீதி ஸ்தலங்களுக்கு தீண்டாதவர்கள் வரக் கூடாது. ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று தங்கள் நோய்களை சொஸ்தம் செய்துகொள்ள அவர்களை ஆஸ்பத்திரிக்குள் அனுமதிப்பதில்லை. தென்னிந்தியாவிலுள்ள சில இடங்களில் தீண்டாதவர்கள் பொது ரஸ்தாக்கள் வழியாகக்கூட நடக்க உரிமையில்லை. தீண்டாதவர்கள் விவசாயம் செய்தாலும் அதிலும் அவர்களுக்கு லாபமில்லை. ஏனெனில், மேல்ஜாதியார் எனப்படுவோர் தீண்டாதவர்களை பலவிதத்திலும் துன்புறுத்தி அவர்களுடைய உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் கொடுப்பதில்லை. எனவே, அரை வயிற்றுக்கஞ்சி கூட கிடைக்காமல் பலர் பிச்சை புக ஆரம்பித்து விடுகின்றனர். பிச்சை எடுப்பதற்குக்கூட அவர்கள் இந்துக்கள் வசிக்கும் தெருக்களில் நடக்கக்கூடாதாம. எவராவது தீண்டாதவருக்குப் பிச்சையிட விரும்பின் தாங்கள் கொடுக்கும் உணவையோ வேறெந்தப் பொருளையோ கீழே வீசி எறிந்து விட்டு ஓடிவந்து விடுவார்கள் பின்பு தீண்டாதவர் வந்து அதை பொறுக்கிக் கொண்டு போகவேண்டும். பிராமணன் தெருவில் நடக்கும்பொழுது திண்டாதவரைக் கண்ணால்கூட பார்க்கக் கூடாது. தற்செயலாக ஊருக்கு வெளியிலுள்ள ரஸ்தாவில் கூட ஒரு தீண்டாதவர் வந்து விட்டால் பிராமணனுக்கு அடங்காத கோபம் வந்து விடும்.

மலையாள தேசத்தில் புலையர்களென்ற ஒரு வகுப்பாரிருந்து வருகின்றனர். இவர்கள் தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு சிறு குடிசைகள் கட்டிக் கொள்வதற்குக்கூட உரிமை கிடையாது. மர நிழலிலேயே இவர்கள் வசிக்கவேண்டும். சில வருடங்களுக்கு முன்பு நாயர் வகுப்பைச்சேர்ந்த ஒருவன் ரஸ்தாவில் நடக்கும்பொழுது ஒரு புலையன் எதிரே வந்து விட்டால் உடனே அவனை கொலை செய்துவிட நாயருக்கு உரிமையிருந்ததென ஸ்ரீ டூபாய் எழுதிவைத்திருக்கிறார். இக்காலத்தில் அவ்விதம் செய்ய நாயர் வகுப்பைச் சேர்ந்த எவனும் துணியமாட்டானெனினும், மேல் ஜாதியார் எனப்படுவோருக்கருகில் கூட புலையர்கள் போகக் கூடாது.

மேல் ஜாதியார் தங்களை ஒதுக்கி வைத்துவிட்டதால் தங்களுக்கு வயிற்றுப் பிழைப்பிற்கு வேறு வழி கிடையாமையால் இவர்கள் திருட்டுத் தொழிலைக்கொண்டுவிட்டார்கள். முடிச்சவிழ்த்தல் வழிப்பறி கொள்ளை கொலை இம்மாதிரிதொல்ழிகளை அவர்கள் ஆரம்பித்தனர். இவர்களில் சிலர் விபசாரத்தாலும் வயிறு வளர்க்க ஆரம்பித்தனர். இம்மாதிரி திருட்டு, கொலை, கொள்ளை முதலிய தீத்தொழிலில் இறங்கிய இவர்களின் தொகை ஏறக்குறைய $4\frac{1}{2}$ லக்ஷமெனச்சொல்லலாம்.

ஹிந்துக்களிடம்தான் தீண்டாமை என்னும் இக்கொடுமை இருந்துவருகிறது. சர். சுரேந்திரநாதபானர்ஜீ என்ற பிரபல இந்தியர், ஹிந்துக்களுடைய பழக்கவழக்கங்களெல்லாம் மத சம்மந்தமானவையென அவர்கள் கூறுகின்றனரென்றும், எதை எடுத்துக்கொண்டாலும் அது தெய்வ சம்மதம், மதசம்பந்தமென ஹிந்துக்கள் கூறுகின்றனரென்றும், சொல்லியுள்ளார்.

தெய்வம், மதம் என்ற பெயரால் பல மூடநம்பிக்கைகள் ஹிந்துக்களுடைய மனதில் ஆழமாக பதிந்து விட்டன. ஹிந்து சமூகத்திலுள்ள ஒவ்வொரு பழக்க வழக்கத்திலும், தெய்வத்தையும், மதத்தையும், புகுத்தி விடுகின்றார்கள்.

கொஞ்சங் கொஞ்சமாக தீண்டாதவர்கள் தங்கள் உரிமைகளைப் பெற்று வருகின்றனர். பல இடங்களில் அவர்களுக்காக பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தீண்டாதவர்களுடைய முன்னேற்றத்திற்காக சர்க்கார் பல கூட்டுறவு சங்கங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

எனினும் சிற்சில இடங்களிலுள்ள பாடசாலைகளில் தீண்டாத வகுப்பைச் சார்ந்த பிள்ளைகளை சேர்ப்பதில்லை. சென்னை ராஜதானியிலுள்ள 8157 பாடசாலைகளில் 609 பாடசாலைகளில் மட்டுமே தீண்டாத வகுப்புப் பிள்ளைகள் அனுமதிக்கப்படுவதாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. வைதீகக்கொடுமை மிகுந்த சென்னைமாகாணத்தில் தீண்டாதவர்களுக்கு இவ்வளவு உரிமை கிடைத்தது மெச்சத்தக்கதே. சென்னை ராஜதானி பிராமணீய இந்துமதத்தின் கோட்டையென முன்பே கூறியுள்ளோம். வைதீகக் கொடுமை மிகுந்த சென்னை மாகாணமே தீண்டாதவர்களென ஒரு சமூகத்தாரை ஒதுக்கி வைத்து, அவர்களை பலவித கொடுமைகளுக்குள்ளாக்கி வருவதாக காணப்படுகிறது. இந்நிலைமையில் சென்னைமாகாணத்திலுள்ள தீண்டாதவர்களுக்கு தற்போது 609 பள்ளிகளுக்காவது சென்று கல்வி பயில அநுமதி கிடைத்திருப்பது போற்றத்தக்கதே.

தஞ்சை ஜில்லாவில்

சுமரியாதை பிரசார சுற்றுப்பிரயாணம்.

மன்னார்குடியில் பெருத்த கிளர்ச்சியும் குதூகலமும்.

விஷமிகள் சூழ்ச்சி பலிக்கவில்லை.

ஸ்ரீமான்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கர், ஆர். சின்னையா பிள்ளை, கே. வி. அழகர்சாமி நாயுடு, எஸ். வி. லிங்கம், திருவாரூர் தியாகராஜ ஞானியார், நாகலூர் கலியாண சுந்தரம், நாகபட்டணம் காளியப்பதேவர், திருச்சி மணிவாசகத் தமிழ் அகம் அமைச்சர் விஸ்வநாதம் பிள்ளை, திருவாரூர் எஸ். வி. ராமன், 'தொழிலாளி' பத்திராசிரியர் தண்டபாணி செட்டியார், பட்டுக்கோட்டை வக்கீல் வேணுகோபால் நாயுடு முதலியோர்கள் 7-ந் தேதி காலை மன்னார்குடி வந்தார்கள். நகரவாசிகள் வரவேற்று 'நாயக்கர் காம்ப் பில்டிங்'! என்னும் பெயரிட்ட பங்களாவில் ஜாகை செய்து சாப்பாடு வசதிகளெல்லாம் சௌகரியமாய் செய்திருந்தார்கள். ஊருக்குள் எங்கு பார்த்தாலும் திரு. நாயக்கர் வருகிறார் என்ற பெரிய பெரிய அச்சுபிரசுரங்கள் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்ததுடன் சுற்றுக் கிராமங்களிலும் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதற்கு விரோதமாக மன்னார்குடி பார்ப்பனர்கள் இப்பிரசாரம் நடக்கவொட்டாமல் செய்வதற்கும் கூட்டங்களில் கலவரங்களுண்டு பண்ணுவதற்கும், பொது ஜனங்களுக்குள் கெட்ட எண்ணம், ஏற்படச் செய்வதற்கும் யோசனை செய்து பொறுப்பற்ற சில பார்ப்பனர்களல்லாதாரைப் பிடித்து அவர்கள் பெயரால் 'நாயக்கர் கோஷ்டியாரைப் பகிஷ்கரியுங்கள், விஷம பிரசாரம் செய்ய வந்திருக்கிறார்கள், சுய நலத்திற்காக பணம் சேர்க்க வருகிறார்கள், அதே சமயத்தில் அநேகம் கேள்விகள் கேட்கப்படப்போகிறது, பதில் சொல்லாமல் நாயக்கர் ஓடப்போகிறார், வேறு சில கூட்டங்களும் அதே சமயத்தில் நடைபெறும்' என்பன போன்ற விஷம வார்த்தைகள் கொண்ட பல துண்டுப் பிரசுரங்களும், சுவற்று விளம்பரங்களும் தண்டோராக்களும் சிறு பையன்கள் மூலம் ஊரெல்லாம் பிரசுரம் செய்யப்பட்டன. ஜனங்களுக்குள் ஏதாவது பெருத்த கலகங்கள் நடக்குமோ என்கிற கவலையும், எங்கு பார்த்தாலும் இதே பேச்சான பரபரப்புகளும், சிலருக்கு கூட்டங்கள் ஒழுங்காக நடைபெறுவதற்கு போலீஸ் உதவிகள் கேட்கலாமா வென்கிற எண்ணமும் உண்டாய் விட்டன. ஆனால் ஸ்ரீ சின்னையா பிள்ளையவர்கள் கண்டிப்பாய்ப் போலீஸாருடைய பிரவேசமே கூடாதென்றும் கூட்டத்தில் எவ்வளவு பெரிய கலகங்கள் நடப்பதாயிருந்தாலும், நாமே சமாளித்துக்கொள்ளவேண்டுமே யல்லாமல் போலீசாரை வைத்துக்கொண்டு கூட்டத்தை நடத்துவதைவிட கலகங்களை அனுபவிப்பதே மேலென்றும், அடிதடிகள் ஏற்படுவதானாலும் தயார் என்றும், அதனால் நமது இயக்கத்துக்கு அதிக பலனுண்டாகுமென்றும் கூறி ஒருவரையும் வாராதபடி தூரத்திவிட்டார். பகலெல்லாம் ஊரிலுள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்களும், முனிசிபல் கவுன்சிலர்களும் தாலூகா, ஜில்லா மெம்பர்களும், மற்றும் பல வாலிபர்களும் முகமதிய கனவான்களும் ஜாகைக்கு வந்து திரு. நாயக்கரைக் கண்டு பேசிவிட்டுப்போனதுடன், அவர்களுடைய வரவேற்பு பத்திரங்களையும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு போனார்கள். பகல் முழுவதும் வானம் கருத்து மழை பெய்துகொண்டிருந்ததினால் குறிப்பிட்ட மைதானத்தில் கூட்டம் நடத்துவதற்கு சௌகரியமில்லாமல் ஒரு நாடகக் கொட்டகையில் நடத்தவேண்டி நேரிட்டதால் முன்பே விளம்பரப்படுத்தி, தயார் செய்து வைத்திருந்தபடி திடீரென்று ஒரு கொட்டகையில் கூட்டத்தை நடத்துவதாக விளம்பரப் படுத்தப்பட்டது. அந்தக்கொட்டகையும் கிடைப்பதற்கில்லாமல் எவ்வளவோ சூழ்ச்சி செய்யப்பட்டாலும் கொட்டகைக்காரர் தைரியமாக முதல் நாளே சாவியைக் கொண்டுவந்து கொடுத்து விட்டார்கள். இது தவிர காங்கிரஸ் தொண்டர் ஸ்ரீமான் சண்முகம் என்பவர் பேரால் 12 கேள்விகளும், ஸ்ரீமான் சொக்கலிங்க முதலியார் என்பவர் பெயரால் 11 கேள்விகளும் எழுதப்பட்டு அச்சுப்பிரதிகள் தனித்தனியாக ஏராளமாய் வழங்கப்பட்டிருந்தன. மழையின் குறி சதா தோன்றிக்கொண்டிருந்தும் நாலு மணி முதல் ஐந்து மணிக்குள்ளாக கொட்டகை நிறையவும் கொட்டகைக்கு வெளியிலும் ஜனங்கள் வந்து ஏராளமாய் கூடி விட்டார்கள். எதிர்ப்பிரசாரங்களும் மிரட்டுதல் வார்த்தைகளுமே ஜனங்களை சுற்று வட்டங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் ஏராளமாய் வரும்படி செய்துவிட்டன. கூட்டத்தில் பார்ப்பனர்களும் அவர்களில் சில பண்டிதர்கள் எனப்படுபவர்களும் தாராளமாய் வந்து குவிந்திருந்தார்கள்.

சரியாக 5-மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டு முதலில் தேசிய கீதமும் கடவுள் வணக்கமும் பாடிய பின் ஸ்ரீமான் சின்னையா பிள்ளையவர்கள் கூட்டத்துக்கு அக்கிராசனம் வகிக்க வேண்டுமென்று பிரேரேபித்து முறைப்படி ஆமோதித்து பெருத்த கரகோஷத்தினிடையே பிள்ளையவர்கள் அக்கிராசனர் ஸ்தானத்தில் அமர்ந்ததும் பலர் தங்கள் தங்கள் சங்கத்தின் பெயராலும் வகுப்புகளின் பெயராலும், ஸ்ரீமான்கள் நாயக்கருக்கும் பிள்ளையவர்களுக்கும் மாலைகள் சூட்டினார்கள். இது சமயம் ஏற்பட்ட ஜனங்களுடைய ஆரவாரம் அளவிடக் கூடியதல்ல. ஸ்ரீ பிள்ளையவர்கள் முன்னுரையாக தாங்கள் இங்கு வந்து பிரசாரம் செய்யும் கருத்தைச் சொல்லி, திரு. நாயக்கரைப்பற்றியும் புகழ் உரையாக இரண்டொரு வார்த்தைகள் சொல்லிப் பலரால் தயாரித்துக் கொடுத்த வரவேற்புப் பத்திரங்களை வாசித்துக் கொடுக்க அநுமதித்தார். முதலாவதாக மன்னார்குடி அஞ்சுமன் ஜமயத்துல் இஸ்லாம் சங்கத்தாராலும், திருக்களர் தேசாபிமான சங்கத்தாராலும், மன்னார்குடி சுயமரியாதை சங்கத்தாராலும், மன்னார்குடி சமரச ஞான சங்கத்தாராலும் வாசித்துக்கொடுக்கப்பட்டன. இதற்கு பதில் சொல்லுகையில் ஸ்ரீமான் நாயக்கர் பெருத்த கரகோஷத்தினிடையேயும், ஜே! என்கிற ஆரவாரத்தினிடையேயும் எழுந்து முதலாவதாக தாம் பிரசாரம் செய்ய வந்திருக்கும் கருத்தையும் அத்தொண்டின் அவசியத்தையும் சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகளில் சொல்லி விட்டு வரவேற்புப்பத்திரங்களிலுள்ள தன்னைப்பற்றிய அளவுக்குமீறிய புகழுரைகளை ஒப்புக்கொள்ள முடியாததற்கு வருந்துவதாயும், அதைவாசிக்கும் போது ஜனங்கள் அதை ஏற்று சந்தோஷத்துடன் ஆரவாரம் செய்ததைப்பார்த்து வெட்கப்பட்டுக் கொண்டிருந்ததாகவும், இந்த உபசாரப்பத்திரங்கள் தன்னுடைய கொள்கைகளை ஆதரித்திருப்பதுபற்றி தனக்கு அதிக சந்தோஷமும், தன்னுடைய தொண்டை அதிக ஊக்கத்துடன நடத்திக்கொண்டு போவதற்குப் பெருத்த ஆதரவாய் இருப்பதை உத்தேசித்து நன்றி செலுத்துவதாயும், அஞ்சுமன் சங்கத்தாரது வரவேற்புப் பத்திரமானது தனக்கு மிகுதியும் சந்தோஷத்தையும் தைரியத்தையும் அளிக்கக் கூடியதாயிருக்கிறதென்றும், ஹிந்துக்கள் என்பவர்களுக்குள் தன்னுடைய தொண்டு நிறைவேறி மேல் கொண்டு காரியம் செய்யும்போது மகமதிய சமூகத்தாரின் உதவி வேண்டியிருக்குமென்றும், அவ்வுதவிக்கு அம்மகமதிய சமூகம் இப்பொழுதே தயாராய் இருக்கிறது என்பதை அவ்வரவேற்புப் பத்திரம் காட்டுகின்றதென்றும், அதை உத்தேசித்தே மகமதிய சகோதரர்களின் வரவேற்புப் பத்திரத்தை மனப் பூர்த்தியாய் ஏற்று நன்றி செலுத்துவதாகவும் சொல்லி உபந்நியாசத்தைத் துவக்கினார். சுமார் 3-30 மணி நேரம் சுயமரியாதை யென்னும் விஷயமாய்ப் பேசினார்.

ஒருநிருபர்.

அப்துல் ரஷீத்தின் அப்பீல்.

சுவாமி சிரத்தானந்தரைக் கொலைசெய்த அப்துல் ரஷீத் செய்துகொண்ட மனுவையும், இரக்கம் காட்டும்படியாக அப்துல் ரஷீதின் தகப்பனார் இராஜப் பிரதிநிதிக்குச் செய்துகொண்ட மனுவையும் ராஜப்பிரதிநிதி இர்வின் பிரபு மறுத்துவிட்டார்.

அப்துர் ரஷீத் இன்னும் ஒன்று அல்லது இரண்டு நாட்களில் தூக்கிவிடப் படுவார் என்று பிரீ பிரஸ் செய்தி கூறுகின்றது.

"ஸைபுல் இஸ்லாம்"

இந்து சமூக சீர்திருத்தம்

ஜாதி வித்தியாசங்கள் ஒழியவேண்டும்.

லாலா லஜபதிராய் தமது "பீபிள்" பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:—

தற்காலத்திய போக்கை அனுசரித்து ஹிந்து சமூகம் கீழ்க்கண்ட வகைகளில் சீர்திருத்தப்படவேண்டும்.

தீண்டாமை ஒழியவேண்டும்.

(1) தீண்டாமையென்னும் ஸ்பரிச தோஷம் முதலில் ஹிந்து சமூகத்திலிருந்து தொலைய வேண்டும். ஹிந்துக்களிடம் தீண்டாமை என்ற வழக்கம் பண்டைக்காலத்திலிருந்து அனுஷ்டானத்தில் இருந்துவரவில்லை. வேதங்களிலாவது, சூத்திரங்களிலாவது, புராணங்களிலாவது, பௌத்தமத நூல்களிலாவது அதைப்பற்றிய பிரஸ்தாபமேயில்லை. வரவர அரசியல் காரியங்களுக்காக இந்தியாவிலுள்ள தீண்டாதார் தொகையை அதிகமாக்கிக்கொண்டு சர்க்கார் வேண்டுமென்றே தங்கள் அறிக்கைகளில் குறிப்பிட்டு வருகின்றனர். 1917-ம் ஆண்டில் 3 கோடியே 10 லக்ஷம் தீண்டாதார் இந்தியாவிலிருந்ததாகக் கணக்கிட்டனர். 1921-ம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்கில் இது 5 கோடியே 30 லக்ஷம் ஆயிற்று. உண்மை யென்னவெனில் இந்தியாவில் ஒரு பிரதேசத்தில் தீண்டாதார் என்று கருதப்படுபவர் மற்றொரு இடத்தில் தீண்டாதாரா யிருக்கமாட்டார்கள். இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்திற்கு விரோதமாயுள்ளவர்கள் இந்தத் தொகையை 6 கோடியாகச் செய்திருக்கிறார்கள். ஸ்ரீமதி மேயோ இந்தியாவில் 6 கோடி தீண்டாதாரும் 6 கோடி ஆதித்திராவிடரும் இருக்கிறதாகச் சொல்லுகிறார். அடுத்த ஜனத்தொகைக் கணக்கில் இந்தியாவிலுள்ள ஹிந்துக்களில் பாதிக்குமேல் தீண்டாதவர் என்று கூறப்படில் அதில் ஒன்றும் ஆச்சரியமிராது. முதலில் எதற்காக இவர்களை இங்ஙனம் நீக்கப்பட்டது என்பதற்கு இப்பொழுது காரணம் தெரியவில்லை. தீண்டாமையின் பூர்வோத்திரத்தைப்பற்றி ஆராயப்புகின் தீண்டாதார் எனப்படுவோர் ஒருநாளும் தீண்டாதாராயிருக்கவில்லை என்பது விளங்கும்.

சாஸ்திரங்களில் ஆதாரமில்லை.

ஹிந்துக்களுக்குள் வழங்கும் இந்த தீண்டாமை தவிர, ஹிந்துக்களல்லாதார் உணவைத் தொட்டுவிட்டால் தீட்டு வந்துவிட்டதாகக் கருதப்படும் வழக்கம் ஒன்று உலவி வருகிறது. முஸ்லிம்கள் வருவதற்குமுன் இத்தகைய தீண்டாமை இருந்துவந்ததாய்க் காணவில்லை. எப்படி இது தோன்றிற்று என்றும் விளங்கவில்லை. அப்பொழுது இந்தியாவுக்கு அன்னியராய் விளங்கிய முஸ்லிம்களுடன் ஒத்துழையாமை தர்மத்தைக் கையாடியதால் இவ்வழக்கம் ஆரம்பித்தது என்று எண்ணலாம்; அல்லது பசுவை கோமாதாவாக வணங்கிய ஹிந்துக்கள், அதைக் கொன்று தின்றவர்களை எல்லாம் தீண்டாதாரென்று கருதி அவர் தொட்ட உணவையும், தண்ணீரையும் அருந்தக்கூடாதென்று தீர்மானித்திருக்கலாம். எது எப்படியும் அடியோடு ஒழியவேண்டிய காலம் வந்துவிட்டது. ஒருவரும் மற்றவரையும் தன்னுடன் கூட ஒரு தட்டிலிருந்து சேர்ந்து உண்ணும்படி கட்டாயப்படுத்த முடியாது. ஐரோப்பியர் இங்ஙனம்செய்யமாட்டார்கள் ஹிந்துக்களிலும் சில ஜாதியார்தான், அதுவும் வெகு நெருங்கிய உறவினராயிருப்பின் ஒரு தட்டில் சாப்பிடுவார்கள். முஸ்லிம்களுக்குள் இது வெகு சகஜம் ஆனால் ஹிந்துக்களல்லாதார் தீண்டிய உணவையும், நீரையும் அருந்தக் கூடாதென்ற நோக்கம் உதிப்பதால், இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமாயுள்ள நல்லுறவும் சமரசமும் இந்திய ஜனங்களுக்குள் வளர இடமில்லாமற் போய்விடுகிறது. சுகாதார முறையில் இத்தீண்டாமைக்கு நியாயமில்லை. சாஸ்திரங்களிலும் ஆதாரமில்லை. சமூக வழக்கத்தினால் ஏற்பட்டதுதான். காரண காரியம்பற்றி தோன்றியதில்லை. இது நியாயமற்றது, தவறானது என்று திடமாக நம்பும் படித்த இந்தியர்கள் இதைத் தொலைக்கத்தீவிரமாய்ப் பிரசாரம் செய்யவேண்டுமென்று நான் கருதுகிறேன். ஏற்கனவே, நாளடைவில் நடைமுறையில் அஃது ஒழிந்துவருகிறது. ஆனால் அதை வேருடன் களைய ஒருவரும் யத்தனிக்கவில்லை. பஞ்சாபிலுள்ள ஹிந்துக்கள் உண்மையில் வைதீகமாயில்லாவிடினும், இம்மாகாணத்தில்தான் தீண்டாமை அதிகமாய் அனுசரிக்கப்பட்டு வருகிறது என்று நினைக்கிறேன். சர்க்கார் மாளிகையில் நடக்கும் விருந்துகளுக்கும், சிற்றுண்டிகளுக்கும், தேக்கச்சேரிகளுக்கும், உயர்ஜாதி வைதீக ஹிந்துக்கள் பலர் செல்லுகிறதை நான் அறிவேன். அவர்களுடன் இதர வைதீகர்களும் வெகு தாராளமாய் கலந்து உறவாடுகிறார்கள். இவர்களில் சிலர் "சநாதன ஹிந்துக்கள்" கூட்டத்தின் தலைவர்களாய் விளங்குகிறார்கள். இது முதல் விஷயம்.

ஜாதிப்பற்று தொலைய வேண்டும்.

(2) இரண்டாவதாக படித்த ஹிந்துக்கள் விசேஷமாய் கவனிக்க வேண்டியது ஜாதிவித்தியாசத்தைத் தொலைப்பதுதான். ஹிந்துக்களுக்குள் ஜாதி வித்தியாசம்தான் ஊன்றி ஆழ்ந்து பதிந்து கிடக்கிறது. கௌதம புத்தரும், குரு நானக்கும், குரு கோவிந்த சிங்கும், ராம் மோகனராயும், தயானந்த சரஸ்வதியும் அவரவர் காலத்தில் அதைத் தாக்கிப் போராடியிருக்கிறார்கள். ஆயினும் ஹிந்துக்களின் மனோபாவத்தைத் திருப்ப முடியாதபடி அவ்வளவு பலமாக அது சமூகத்தில் ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது. ஓரிரண்டு இடங்களில் சில்லறை சீர்திருத்தங்கள் செய்ய சாத்தியப்பட்டிருக்கிறதேயன்றி, மொத்தத்தில ஜாதிக்கொடுமை ஒரு சிறிதும் குறையவில்லை. பிரபு சைதன்யா, பாபா நானக், குருகோவிந்தசிங் இவர்களைப் பின்பற்றியவர்கள் ஜாதிப்பற்றைவிட்டொழிக்கவில்லை. பிரம்ம சமாஜமும், ஆரிய சமாஜமும் அவ்வகையில் ஒன்றும் சாதிக்க முடியவில்லை. அதுமட்டுமில்லாமல் ஜாதிசபைகளும் தோன்றி, பிற்போக்கான கருத்துக்கள் மிகுந்திருக்கின்றன. சென்ற தேர்தலின்போது இந்த ஜாதி அபிமானத்தால் அரசியல் துறையில் எவ்வளவு தீமை விளையக்கூடுமென்றும், ஆதனால் தேசீயத்திற்கு எவ்வளவு கஷ்டம் உண்டாகக்கூடுமென்றும் விளங்கிற்று. ஹிந்துக்களுக்குள் தான் ஜாதி வித்தியாச மிருக்கிறதாக சிலர் நினைக்கிறார்கள். இது முற்றும் தவறு. முஸ்லிம்கள் ஹிந்துக்களைப்போல் அவ்வளவு கேவலமாக ஜாதிவித்தியாசங்கள் பாராட்டுகிறார்களென்றால் அது நியாய மாகாது. ஆயினும் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள் இருசமூகத்தினரும் ஜாதிவித்தியாசம் பார்க்கிறார்கள் என்பது உண்மை. லாகூர் நகரத்தொகுதிக்கு ஒரு முஸ்லிம் அங்கத்தினரைச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், சென்ற தேர்தலில் முஸ்லிம்களுக்குள்ளேயே ஜாதி வேற்றுமையைத் தழுவியே போட்டி நடந்தது.

தீர்மானத்தால் தீமை ஒழியாது.

ஆனால் இந்துக்களுக்குள் தான் இந்த ஜாதிவித்தியாசம் அதிகமாய்வளர்க்கப்பட்டு தீவிர வேற்றுமை பரவியிருக்கிறது. ஆனால் பேஷாரில் தவிர வேறெங்கும் அது விசேஷமாய்ப் பலிக்கவில்லை. அரசியல் விஷயங்களிலும் ஜாதிவேற்றுமை நுழைந்து இருக்கிறது என்பதை மறுக்க முடியாதெனினும், அதனால் அரசியல் விஷயங்கள் அதிகமாய் பாதிக்கப்படவில்லை என்று நிச்சயமாய்க் கூற முடியும். எனினும், அதனால் ஏற்படும் விஷமம் ஏராளமானது. சர்க்கார் இதைக்கொண்டு பிளவுகளை உண்டுபண்ணி நீடித்துவர முயலுகின்றனர். பாய் பரமானந்தர் ஜாதி வித்தியாசங்களை ஒழிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருவது பாராட்டத்தக்கது. சமீபத்தில் நடந்த ஐக்கியமாகாண சமூக சீர்திருத்த மகாநாட்டிலும் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கவேண்டுமென்றும், ஒரு ஜாதிக்குள்ளேயே இருக்கும் கிளை ஜாதியினருக்குள் கலப்பு விவாகஞ்செய்து கொள்வதற்கு இருக்கும் தடைகளை நீக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன. ஆனால் தீர்மானங்கள் செய்வதாலும், பிரசாரங்கள் செய்வதாலும் இந்தத் தீமை ஒழிந்து விடாது.

கலப்பு விவாகம் தேவை.

இந்து சமூகத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். (அ) நவீன முறையில் கல்வி கற்றவர்கள். (ஆ) அத்தகைய கல்வி பெறாதவர்கள். இதில் முதல் வகுப்பினருக்குள் ஜாதி வித்தியாசத்தைத் தொலைக்கவேண்டுமென்ற அபிப்பிராயம் மிகுந்திருக்கிறது. எனினும், 'வருணாசிரம தர்மத்தைப்' பற்றி பேசுபவர்கள் பலர் இருக்கிறார்கள். உண்மையில் ஜாதி வித்தியாசம் ஒழியவேண்டியதற்கு கலப்பு விவாகம் செய்யவேண்டும். இத்தகைய விவாகங்கள் வெகு அரிதாயிருக்கின்றன. ஜாதிவேற்றுமையின் கொடுமையைப்பற்றியெல்லாம ஜனங்கள் வாய் கூசாமல் பேசுவார்கள். ஆனால் தங்கள் மகனுக்கு அல்லது மகளுக்கு மணம் புரிவிக்க வேண்டிய காலம் வரும் பொழுது, தங்கள் ஜாதிக்குள்ளேயேதான் மருமகளையும் மாப்பிள்ளையையும் தேடுகிறார்கள்.

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க).

சேலம் மகாநாடு.

சேலம் மகாநாடு சென்ற வாரம் வெகு விமரிசையாக நடை பெற்றது. அதற்கு விரோதமாக பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சி கொஞ்சமல்ல.

இதுவிஷயத்தில் ஸ்ரீமான்கள் பி. வரதராஜுலு நாயுடுவும் ஜி. ராசந்திர நாயுடுவும் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

பார்ப்பனர்கள் இவர்கள் முயற்சிக்குசெய்த கொடுமைகளையும் இடையூறுகளையும் பார்த்து மனம்பொறுக்காமலேயே பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் அநேகர் சேலம் மகாநாட்டுக்கு வந்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் சேலம் மகாநாட்டால் வெளியாயிற்று. அதென்னவெனில் காங்கிரசை பார்ப்பனரிடமிருந்து பார்ப்பனரல்லாதார் லேசில் கைப்பற்றிவிடலாம் என்று வெகு சுலபமாக சிலர் வாயில் பேசிக் கொண்டிருந்தது தப்பு என்பதும் அது சுலபத்தில் முடியக்கூடிய காரியம் அல்ல என்பதும் நன்றாய் வெளியாய்விட்டது பார்ப்பனரல்லாதார் சேலம் ஜில்லா மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியைக் கைப்பற்ற மாத்திரம் 1000 ரூ செலவு செய்ய வேண்டியிருந்தது. அப்படிக் கைப்பற்றியும் கூட அநேகமாய் எல்லா பார்ப்பனர்களும் வெளியேறியதுடன் சில கோடாரிக் காம்புகளையும் பிடித்து இது சரியான கமிட்டி அல்ல, இது சரியான தேர்தல் அல்ல, என்று பலவித குற்றங்களைச் சொல்லித்தள்ளிவிட்டார்கள். தற்கால ஏற்பாடாய் நடக்கும் மகாநாட்டுக் கமிட்டியை கைப்பற்றவே 1000 ரூ. செலவு செய்தும் கமிட்டி சரியானதல்லவென்று சொல்லப்பட்டுவிடுமானால் இனி வருஷமெல்லாம் நிரந்தரமாயிருக்கும் காங்கிரஸ் கமிட்டியை கைப்பற்றுவதென்பது சுலபத்தில் முடியக்கூடிய காரியமாகுமா? அந்தப்படி முடிந்தஇரண்டொரு இடங்களில் கூட அவை தப்பான கமிட்டிகள் என்று சொல்லி அவைகளை செல்லாததாக்கிவிட்டு வேறு கமிட்டிகள் ஏற்படுத்திக்கொண்டதாகச் சொல்லி தங்களுக்கே ஏகபோகமாக்கிக் கொண்டார்கள். சேலம் ஜில்லா காங்கிரசையும் கூட இப்படியேதான் செய்துவிட்டார்கள்.

எங்காவது தேச ஊழியம் செய்ய வேண்டும் என்கின்ற ஒருவன் இந்த மாதிரி அயோக்கிய பார்ப்பனர்களுடன் சண்டை போட்டுக்கொண்டிருக்க முடியுமா என்பதை யோசித்தால் காங்கிரசில் இருக்கும் பார்ப்பனரல்லாதார் சங்கதி விளங்காமல் போகாது.

நிற்க இவ்வளவு கஷ்டப்பட்டு நடத்திய சேலம் மகாநாட்டால் என்ன பலன் உண்டாயிற்று என்று பார்த்தால் பார்ப்பன ஆதிக்கக் காங்கிரசு ஒரு ரூபாயானால் சேலத்தில் பார்ப்பனரல்லாா 1000 ரூ செலவு செய்து கைப்பற்றி நடத்திய பார்ப்பனரல்லாதார் காங்கிரசு 16 அணா என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் வகுப்புவாரி உரிமைக்கும் ஏற்றதான சில தீர்மானங்கள் அதில் நிறை வேற்றப் பட்டிருந்தாலும் மக்களை ஏமாற்றும் தீர்மானங்களும் அரசியலின் பேரால் தாராளமாய் நிறைவேற்றப் பட்டிருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

அதாவது ராயல் கமிஷனில் சரியான பிரதிநிதி தத்துவம் இல்லாமல் இருந்தால் அதை பகிஷ்கரிக்க வேண்டும் என்கின்ற தீர்மானமும் பெசண்டம்மையாரின் காமன் வெல்த்து பில் என்னும் மசோதாவை ஒப்புக்கொள்வதான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதையுமே முக்கியமாய்ச் சொல்லலாம். ராயல் கமிஷனை பகிஷ்கரிப்பதென்பதும் அதற்கு நிபந்தனை சரியான இந்தியப் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் என்பதும் எவ்வளவு மோசமானது என்பது விளங்காமல் போகாது இதை அநேக பலர் ஆக்ஷேபித்து அவ்வாக்ஷேபணை எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டும் சில நடைபசொந்தமரியாதையைக் காப்பாற்ற வேண்டி இத்தீர்மானம் தாக்ஷிணியத்தின் பேரில் நிறைவேற்றப்பட வேண்டியதாகி விட்டது. அதற்கு ஓட்டுக்கொடுத்த பலர் இத்தீர்மானத்தை நிறைவேற்றினால் ஸ்ரீமான்கள் பி. வரதராஜுலு நாயுடுவுக்கும் ஆர். கே. ஷண்முகம் செட்டியாருக்கும் ராயல் கமிஷனில் இடம் கிடைக்கக்கூடும் என்கின்ற ஆசையுடனேயே ஓட்டு கொடுத்தார்கள் என்று நினைக்கத்தக்கதாகவே இருந்தது. யார் சரியானவர்கள் என்பதும் யாரை நியமித்தால் பலனளிக்கக்கூடியதாயிருக்கு மென்பதும் இவ்விருகனவான்களுக்கே அர்த்தமாகாமல் ராயல் கமிஷனைப்பற்றி அபிப்பிராயம் கொடுத்து பாமர மக்களை வைத்தியக்காரர்களாக்கி கெட்டபெயர் சம்பாதித்துக்கொடுத்து விட்டார்கள்.

இரண்டாவதாக பெசண்டம்மையார் காமன் வெல்த் மசோதா தீர்மான விஷயத்தையும் அது இன்னது என்றும் அதில் இன்னது இருக்கின்றது என்றும் அங்குள்ள மக்களுக்கு தெரிவிக்காமலேயே அதை ஒப்புக்கொள்வதாக தீர்மானித்துக்கொண்டார்கள். பார்ப்பனர்கள் எப்படி வேதத்தை படிக்க இடங்கொடுக்காமலேயே எல்லோரையும் ஒப்புக்கொண்டதாகச் சொல்லும்படி ஏமாற்றி வருகின்றார்களோ அதுபோலவே இவ்விஷயத்திலும் செய்திருக்கின்றார்கள். இதுபோல மோசமான காரியம் வேறொன்றைச் சொல்லவே முடியாது.

பார்ப்பனரல்லாத மக்கள் காங்கிரசில் சேர்ந்தால் எப்படி ஏமாற்றப்படுவார்கள் என்பதையும் எப்படி பாமர மக்களை மற்றவர்கள் தங்கள் சுயநலத்துக்குஉபயோகித்துக்கொள்வார்கள் என்பதையும் சேலம் ஜில்லா மகாநாடு காட்டி விட்டது.

ராயல் கமிஷனைப் பற்றியாவது, பெசன்டம்மை காமன் வெல்த் மசோதாவைப்பற்றியாவது, அதனால் நமது நாட்டுமக்களுக்கோ அல்லது அம்மகாநாட்டில் அநேகமாய் முழுதுமாயிருந்த பார்ப்பனரல்லாத மக்களுக்காவது ஒரு காதொடிந்த ஊசியளவு பயனாவது உண்டு என்று யாராவது சொல்லக்கூடுமாவென்று கேட்கிறோம். நாளைக்கு யாராவது சொல்லுவதானாலும் கேட்டுக்கொள்ளத்தயாராயிருக்கின்றோம். ஆகவே காங்கிரசைப் பார்ப்பனரல்லாதார் கைப்பற்றியதால் பலன் என்ன என்பதும் சேலம் மகாநாட்டால் தெரிந்துபோயிற்று என்றே சொல்லலாம். மற்றப்படி மகாநாடு ஏற்பாடுகளும் வந்த பிரதிநிதிகளுக்கும் மற்றும் அழைப்புக்காரர்களுக்கும் வேண்டிய சவுகரியங்களும் போஜன வசதிகளும் மிகவும் சிறப்பாகவே நடைபெற்றது.

தென்னிந்திய செங்குந்த சமாஜத்தாருக்கு ஓர் வேண்டுகோள்.

ஐயா, கீழ்கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடை அளித்தால் நன்றியறிதலுள்ளவனாக இருப்பேன்.

தென்னிந்திய சங்கத்தாராகிய நீங்கள் கோவை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கத்தாரை அவர்களும் ஏதாவது ஒரு வகை செங்குந்தர்கள் என்று ஒப்புக்கொள்ளுகிறீர்களா அல்லது அடியோடு மறுக்கின்றீர்களா?

ஒப்புக்கொள்வதானால் அவர்கள் பேரில் தங்களுக்கு இவ்வளவு வெறுப்பு ஏன்?

ஒப்புக்கொள்ளவில்லை என்று சொல்வீர்களானால், யாதாவது ஒருவரை அவர்கள் இன்ன வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று சொல்வதற்கு உங்களுக்கு என்ன அதிகாரமிருக்கின்றது? அதற்கு ஆதாரமென்ன?

எங்காவது ஏதாவது செங்குந்தர்களுக்குள் சில குடும்பங்களிலாகிலும் கோவில்சாமி சேவைசெய்வதற்கென்று ஏதேனும் பெண்களை குறிப்பிட்டுவிடுவதான வழக்கம் எப்போதாவது இருந்தது என்று சொல்லுகின்றீர்களா? அல்லது இல்லவே இல்லை என்று சொல்லுகின்றீர்களா?

இருந்ததானால் கோவை சமாஜத்தாரை மாத்திரம் குற்றம் சொல்லுவானேன். இல்லையானால் இப்போது தென் இந்திய செங்குந்த சமாஜத்திற்கு சம்மந்தப்பட்ட எந்தக் குடும்பங்களிலாவது எப்போதாவது அதாவது 1, 2, 3, 4, 5 தலைமுறைகளுக்குள்ளாவது அவ்வித வழக்கமோ அல்லது அவ்வித வழக்கமுள்ளவர்களிடம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமோ உண்பன தின்பனமுதலியவைகளோ இல்லை என்று உறுதிகூற முடியுமா?

முடியாவிட்டால் கோவை சங்கத்தாரிடம் மாத்திரம் இவ்வளவு துவேஷமேன்? கூறமுடியுமானால், தென் இந்திய செங்குந்த சமூகத்தைச்சேர்ந்த பலகுடும்பங்களுக்குள் இவ்விதவழக்கமும், வழக்கமிருந்தவர்களுக்குள் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமும் இருந்துவந்ததையும் வருவதையும் ரூபித்தால் அதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள்?

இக்கேள்விக்கு பதில் வந்த பிறகு மற்ற விஷயங்களும் தெரிவிப்பதுடன் செங்குந்த சமூகம் என்பதைப்பற்றியும், கைக்கோள சமூகம் என்பதைபற்றியும் கோவைச் சங்கத்திற்கும், தென் இந்திய சங்கத்திற்கும் சம்மந்தமில்லாதவர்களும் பாரபக்ஷமில்லாதவர்களுமான வெள்ளைக்காரரும் இந்துக்கள் உள்பட மற்றும் சில ஆராய்ச்சிக்காரரும் எழுதிய அபிப்பிராயங்களையும் கல்வெட்டு ஆதாரங்களையும் வெளிப்படுத்துகிறேன்.

“அழக நம்பி”



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஷு ஐப்பசி 28-உ

ராயல் கமீஷன்

ஒரு கூட்டுக்கொள்ளை.

II.

சென்ற வாரம் மேல் கண்ட தலைப்புடன் ஒன்று இலக்கமிட்டு ஒரு தலையங்கம் எழுதி இருந்தோம். இவ்வாரம் அதே தலைப்புடன் இரண்டாவது வியாசம் எழுதுகின்றோம்.

சென்ற வாரம் ராயல் கமீஷன் என்பது சர்க்காரும் அரசியலின் பேரால் வாழும் சில தலைவர்கள் என்னும் படித்த கூட்டத்தாரும் சேர்ந்து இந்திய ஏழைமக்களை வஞ்சித்து கொடுமைக்குள்ளாக்கி வாழச்செய்யும் சூழ்ச்சி என்கின்ற கருத்துக்கொண்டே அதை கூட்டுக்கொள்ளை என்று சொன்னோம். அந்தப்படி சொல்லியவைகளை எல்லாம் இவ்வாரத்திய சம்பவங்கள் உறுதிப்படுத்தியதோடு இந்தியத் தலைவர்கள் என்று சொல்லப்படும் கூட்டம் எவ்வளவு தூரம் உண்மையும் யோக்கியப் பொறுப்பும் அற்றவர்களென்பதும் எவ்வளவுதூரம் நாணயக் குறைவுகளு முடையவர்கள் என்பதையும் விளக்கிவிட்டது.

காங்கிரஸ் என்பதும் மற்றும் அது போன்ற அரசியல் இயக்கங்கள் என்பதும் அடியோடு ஏழைமக்களை சில அறிவாளிகள் ஏமாற்றவும் கொடுமைப்படுத்தவும் ஏற்பட்டன என்றும் அவைகளின் பலன் அவைகள் ஏற்பட்ட நாள் தொட்டு இந்திய நாட்டையே அடியோடு பல வழிகளிலும் பாழ்படுத்தி மீளாத அடிமைத் தனத்தில் ஆழ்த்தி வருகின்றதென்றும் பன்முறை எழுதியும் பேசியும் வந்திருக்கின்றோம். பொதுவாழ்வு என்பதானது யோக்கியன் என்பவன் எவனும் பொதுநன்மைக்கு உழைக்க முடியாத அளவு நாட்டை பாழ்படுத்தி விட்டது என்றும் சொல்லி வந்திருக்கின்றோம். ஆனாலும் பாமர மக்கள் சுலபத்தில் இவ்வேமாற்றத்திலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் தப்புவதாக காணப்படவில்லை. அதலால் அவர்களுக்கு உண்மை உணர்ச்சி ஏற்படும் வரையில் நாடு முழுதும் கஷ்டமும் நஷ்டமும் அடைந்து வருவதில் ஆச்சரிய மொன்றுமில்லை.

இவ்விஷயங்களை ஸ்ரீமான் காந்தி அவர்களிடமும் தெரிவித்தபோது அவர் அதை அப்படியே ஒப்புக்கொண்டு "பொதுவாக எல்லா மக்களுக்கும் புத்திவருகின்றவரை புத்திசாதுர்யமுள்ள ஒரு கூட்டத்தார் தான் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்க முடியும்; ஆதலால் அது ஜனங்களின் அறிவீனமே ஒழிய மற்றவர்கள் தப்பிதமல்ல" என்று சொல்லி மழுப்பிவிட்டார். மற்றும் அநேக பெரியாரும் இம்மாதிரியே தான் சொல்லிக்கொண்டே ஏமாற்றும் கூட்டத்திலே சேர்ந்துகொண்டு மக்கள் ஏமாற்றப்படுவதற்கு அனுகூலமாகவே இருக்கிறார்கள்.

ஆங்கிலேய அரசாக்ஷியானது இந்தியநாட்டிற்கு அநேக காரியங்களில் பார்ப்பன ஆக்ஷியைவிட அதிகமான கொடுமைகளை உண்டாக்கிவிடவில்லை என்பது ஒரு புறம் ஒப்புக்கொள்ளக்கூடியதானாலும் இந்தியப் பொருளாதார விஷயத்தில் இந்தியாவை சுரண்டிக்கொண்டு போகும் காரியத்தில் இதுவரை எந்த ஆக்ஷியும் இவ்வளவு மோசமாக நடந்து கொண்டதாக யாரும் சொல்ல முடியாது என்றே சொல்லுவோம், ஆனாலும் இவ்வாங்கிலேயருக்கு இவ்விஷயத்தில் பெரிதும் உதவியாயிருந்து வருவது நம் நாட்டு அரசியல் இயக்கங்கள் தான் என்பதையும் அரசியல் தலைவர்கள் தான் என்பதையும் தைரியமாய்ச் சொல்லுவோம். ஏனெனில் அரசியல் இயக்கம் என்பதாக ஒரு மாய்கையை யேற்படுத்தி மக்களை அதிலேயே மயங்கச் செய்து விட்டு அதன் மூலமாய் ஆங்கிலேயரிடம் உத்தியோகம் பெறுவதற்காக பலர் எடுத்துக்கொண்ட முயற்சியில் வெற்றி பெற போட்டி போட்டுக்கொண்டு வெள்ளையரின் கொள்ளைக்கு உள் உளவாகவும் உடந்தையாகவும் இருக்கவேண்டியதாகி விட்டதுதான் என்போம். இதன் மூலமாய் வெள்ளையர்களுக்கும் தங்கள் கொள்ளைகளை தாராளமாய்நடத்த சவுகரிய மேற்பட்டதுடன் ஏன் என்று கேழ்பதற்கும் ஆள் இல்லாமல் போய் விட்டது. இன்றைய தினமும் எந்த ஒரு அரசியல் தலைவர் என்பவருக்காவது ஒரு அரசியல் இயக்கம் என்பதிற்காவது இக்கொள்ளையைப்பற்றிய கவலை ஒரு சிறிதாவது இருக்கின்றதா என்று பார்த்தால் இவ்வுண்மை விளங்காமல் போகாது.

கமிஷன்.

தற்போது சர்க்காரார் ராயல் கமீஷன் என்பதாக ஒரு கமிட்டி நியமித்திருப்பதைப் பற்றி அரசியல் தலைவர்கள் என்போர்கள் எல்லோரும் ஒரே மூச்சாக கூப்பாடு போடுகின்றார்கள். தேசியப் பத்திரிகைகள் என்பவைகளும் மற்றும் சமூகப பத்திரிகைகளும் ஒரு வண்ணானின் கழுதை செத்துப்போனதற்காக ஊரெல்லாம்சேர்ந்து கங்காதரா மாண்டாயோ கங்காதரா மாண்டாயோஎன்று அழுத கதைபோல் கொஞ்சமும் யோசனையில்லாமல் "கமிட்டியை பஹிஷ்காரம் செய்யவேண்டும் பஹிஷ்காரம் செய்யவேண்டு" மென்று ஓலமிடுகின்றன. இதனால் இந்திய தேசீயம் என்ன என்பதும் தேசீய வாதிகள் யோக்கியதையும் தேசீய பத்திரிகைகளின் யோக்கியதையும் என்ன என்பதும் விளங்குகின்றது.

இந்தியா சுயராஜ்யம் அடைய கமீஷனே வேண்டியதில்லை என்றாவது கமீஷன் வைத்து பரீக்ஷை பார்த்து பிச்சை கொடுப்பது போல சுயராஜ்யம் வெள்ளையர் கொடுக்க இந்தியர் வாங்குவது என்கின்ற தத்துவம் கூடாது என்பதற்காவது வாதாடுவதாயிருந்தால் அது ஆண்மையும் சுயமரியாதையுமான காரியமாயிருக்கும்.

அப்படிக்கு ஒரு சிறிதும் இல்லாமல் கெஞ்சிக்கெஞ்சி பிச்சை கேழ்ப்பதாகக் காட்டிக்கொள்ளும் இந்தியர்களுக்கு பிச்சை போடும் நிலையில் இருப்பதாக நினைத்து இருக்கும் வெள்ளைக்காரர்கள், இந்தியர்கள் அதிகமான சீர் திருத்தத்திற்கு அருகர்களா இல்லையா என்று பார்ப்பதற்காகவும் கொடுத்த சீர்திருத்தங்களை ஒழுங்காய் நடத்தி இருக்கின்றார்களா இல்லையா என்று பார்ப்பதற்காகவும் இதற்குமுன்னால் வழங்கப்பட்டிருக்கும் சீர் திருத்தங்களில் ஏதாவது நடைபெற முடியாத குற்றங்கள் இருக்கின்றதா என்பதற்காகவும் சீர்திருத்தம் வழங்க அதிகாரமுள்ளவர்கள் என்று இந்தியா தேசியவாதிகளென்போர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட பிரிட்டிஷ் பார்லிமெண்டார் என்கின்றவர்கள் ஒரு கமிட்டி நியமித்தால் அதில் அங்கம்பெற இந்தியர்களுக்கு உரிமை எப்படி உண்டாகும்?

இந்தியர் அருகர்களா இல்லையா என்கின்ற கமிட்டிக்கு இந்தியர் அங்கம் பெறுவது என்பது தனது யோக்கியதையை பரீக்ஷிக்க தானேநீதிபதியாயிருக்கின்றது என்கின்றது போலவா அல்லவா என்று கேட்கின்றோம்.

இந்தியர்கள் சீர்திருத்தம் அடைய யோக்கியதை உடையவர்கள் என்பதை காட்டிக்கொள்ள ஆசையிருந்தால் அந்தக் கமிட்டியின் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லும் நிலையில் இருந்து தங்களது பெருமையையும் சாமர்த்தியத்தையும் காட்டுவதுதான் யோக்கியமும் நியாயமுமானதாகும்.

மிண்டோமார்லி சீர்திருத்தத்தில் எத்தனை இந்தியர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்றாவது மாண்டேகு செம்ஸ் போர்ட் சீர்திருத்தத்தில் எத்தனை இந்தியர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்றாவது யாராவது சொல்லக்கூடுமா. அப்படியிருக்க இப்பொழுது மாத்திரம் இந்தியர்களும்இம்மாதிரி கமிட்டியில் உட்காரும்படியான யோக்கியதை என்ன வந்து விட்டது.

மிடொன்றுமுன்சீர்திருத்தங்களின்போது இந்தியர்களுக்குள் ஒற்றுமைக் குறைவும் வகுப்புப் பிரிவினையும் இருந்து இப்போது எல்லோரும் ஒன்றாகிவிட்டார்களா?

முன்கேட்கப்படாத ஒருபுது உரிமையை இப்போது கேட்பதற்கு ஒருபுதிய யோக்கியதைஇருக்கவேண்டும் அல்லது முன்னையை விடஇப்போது நல்லபுத்தி வந்திருக்கவேண்டும். இரண்டில் இப்போது எதைச் சொல்ல முடியும்.

இது ஒருபுறம் நிற்க கமிஷனில் இந்தியர்களில் யாரை நியமிப்பது என்றாவது யாரை

நியமித்தால் யார் ஒப்புக்கொள்ளத்தயாராய் இருக்கின்றார்கள் என்றாவது யாராவது சொல்லமுடியுமா? ரௌலட் கமிட்டியில் ஸ்ரீமான் குமாரசாமி சாஸ்திரிகளை இந்தியர் என்கிற முறையில் நியமித்து அவரும் விசாரணை செய்து திருப்தி அடைந்து கையெழுத்து போட்டதின் பலனாய் அவர் குடும்பம் பூராவும் ஜில்லா ஜட்ஜ் ஹைக்கோர்ட் ஜட்ஜ் ஆக முடிந்ததல்லாமல் கமிட்டியின்ரிப்போர்ட்டுபடி ஏற்பட்டசட்டம் இந்தியர்கள் ஒப்புக்கொள்ள முடிந்ததா என்றுகேட்கின்றோம்.

சர், சிவசாமி அய்யரும் மகா கனம் சீனிவாச சாஸ்திரியும் மற்றும் பண்டிதர்கள், நேரு,மாளவியா,போன்ற அனேக இந்தியர்களும் பல் பல கமிட்டிகளில் இருந்து விசாரணைசெய்து தயாரித்த ரிப்போர்ட்டுகளெல்லாம் இந்தியர்கள் ஒப்புக்கொள்ளக்கூடியதாயிருந்ததா என்று கேட்கின்றோம். இந்தியாவிலுள்ள பெரும் பான்மையான இந்தியரின் நம்பிக்கைக்கு பாத்திரமானஏதாவது ஒரு இந்தியர் இதுசமயம் நமதுநாட்டில் இருக்கின்றார்களென்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

ஒத்துழையாமையை ஒழிக்க வென்றே நினைத்து இந்திய தேசிய காங்கிரஸ் என்கின்ற ஸ்தாபனம் சட்ட மறுப்புக் கமிட்டி என்பதாக தேசியத் தலைவர்கள் என்பவர்களையே ஒரு கமிட்டியாக நியமித்து அநேக ஆயிரம் ரூபாய்களை செலவுசெய்தது யாருக்கும் தெரிந்த விஷயம்தானே. அந்தக் கமிட்டி மெம்பர்கள் யோக்கியமாய் நடந்துகொண்டார்கள் என்பதாகவாவது அல்லது அவர்கள் செய்த ரிப்போர்ட்டு யோக்யமானதென்றாவது இந்திய மக்கள் ஒப்புக்கொண்டார்களா? அக்கமிட்டி விசாரணையில் இந்திய பிரமுகர்கள் எல்லாம் கலந்து கொண்டார்களா? என்றும் கேட்கின்றோம்.

கமிட்டி என்று சொல்லுவதே பித்தலாட்டம் என்று தானே இந்தத் தலைவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் கத்திக்கொண்டிருந்தார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு இப்போது எப்படி திடீரென்று கமிட்டியில் அதுவும் வெள்ளைக்காரரையே அதிகமாகக் கொண்ட கமிட்டியில் நம்பிக்கை வந்து விட்டது என்று கேட்கின்றோம்.

வெள்ளைக்காரர்கள் இந்தியர்களை இந்தக் கமிட்டியில் நியமிப்பதானால் யோக்கியமாய் நடு நிலைமையில் இருந்து பார்த்தால் குறைந்த பக்ஷம் தேசியசபை என்னும் காங்கிரசுக்காக ஒருவரையும், மிதவாதிகள் என்பதற்காக ஒருவரையும், ஜஸ்டிஸ் கக்ஷி என்பதற்காக ஒருவரையும், மகமதியர்களுக்காக ஒருவரையும், ஒடுக்கப்பட்ட வகுப்பார்கள் என்பதற்காக ஒருவரையுமாவது நியமித்து ஆகவேண்டும்.

வெள்ளையர்கள் இதை ஒப்புக்கொள்ளுவார்களா அல்லது இந்தியர்களாவது இதை ஒப்புக்கொள்ளுவார்களா? நாட்டில் ஒவ்வொன்றும் யோக்கியமாகவோ அயோக்கியமாகவோ கோடிக்கணக்கான ஜனங்களைக் கொண்டதென்று சொல்லிக்கொண்டு பல வேறு ராஜீய அபிப்பிராயம், பல வேறு மதம், உயர்ந்தது தாழ்ந்தது தீண்டத்தகாதது என்பனபோன்ற பலவேறு வகுப்புகள் ஆகியவைகளாய் இருப்பதோடு ஒன்றுக்கொன்று கெட்ட எண்ணமும் நம்பிக்கை இன்மையும் துவேஷமும்கொண்டிருக்கின்ற போது இந்தியர்களை கமிட்டியில் நியமிப்பது என்கின்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன என்று கேழ்க்கின்றோம், பொதுவாக இந்தக் கமிட்டியைப்பற்றி அடியோடு நமக்கு இஷ்டமில்லையென்பதும் கமிட்டி நியமித்ததுவே பித்தலாட்டமெனவும் இந்தியர்கள் அதில் அங்கத்தினர்களாக வேண்டுமென்று கேட்பது அதைவிடப் பித்தலாட்டமெனவும் இருவரும் அதாவது சர்க்காரும் இந்தியத்தலைவர்கள் என்போர்களும் கூடிக்கொண்டு குடியானவர்களையும் தொழிலாளர்களையும் மொட்டை அடிப்பதற்கு ஏற்பாடுசெய்த சூழ்ச்சியே இதுஎன்பதும் நமது வெகுநாளைய அபிப்பிராயம் என்பது யாவருக்குமே தெரிந்திருக்குமென்றே நம்புகின்றோம்.

பொதுவாக இந்தக் கமிஷனைப்பற்றி இந்துமத் தலைவர்கள் என்பவர்கள் பல அபிப்பிராயம் கொடுத்திருந்தாலும் அவை இரண்டு தத்துவங்களுக்குள்ளாக தான் வரும்.

அதாவது இந்திய மக்கள் எல்லோருக்கும் பணக்காரன் ஏழை தொழிலாளி முதலாளி, ஆங்கிலம் படித்தவர்கள் ஆங்கிலம் படிக்காதவர்கள், உயர்ந்த ஜாதியார் என்பவன், தாழ்ந்த ஜாதியார் என்பவன், என்கின்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் அரசியல் முறையில்வேறு கூட்டத்தார் தயவு இல்லாமல் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் உண்டாகும்படி செய்வதா அல்லது கையில் வலுத்தவனுக்கு ஏகபோக உரிமையாக இப்போதயதைப் போலவே இருப்பதா என்பது தான் முக்கிய தத்துவங்களாகுமே அல்லாமல் பிரிட்டிஷாருக்கும் இந்தியர்களுக்கும் அதிகாரம் பதவி, தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவைகளில் அனுகூலம் முதலியவைகள் செய்யும் விஷயங்களில் தகராருகள் அதிகமாய் இருக்கும் என்று யாரும் சொல்ல முடியாது என்பதே நமது அபிப்பிராயம், ஏனெனில் அதைப் பற்றி எந்த இந்தியத்தலைவருக்கும் கவலையே இல்லை. சுருக்கமாய் சொல்ல வேண்டுமானால் புதிய சீர்திருத்தத்தில் இப்போது இருக்கும் வகுப்பு வாரி பிரதி நிதித்துவம் என்பதை எடுத்து விடுவதா அல்லது இன்னம் கொஞ்சம் விரிவு படுத்துவதா என்பதே முக்கியமானதாகும். அதென்னவெனில் மகமதியர்களுக்கு விரோதமான சில வட நாட்டு இந்துக்கள் என்போர்களும் பார்பபனரல்லாதாருக்கு விரோதமான பல தென்னாட்டுப் பார்ப்பனர்களும் செய்து வரும் பிரசாரமும் தேச சேவையும் என்பதெல்லாம் இந்த வகுப்புவாரிப் பிரதிநிதி தததுவத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்கின்ற கருத்துக்கொண்டே அல்லாமல் வேறு அல்ல. ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரவர்கள் வடக்குக்கும் தெற்கும் ஓடி ஓடிப் பிரசாரம் செய்த இந்து முஸ்லீம் ஒற்றுமை என்கின்ற புரட்டெல்லாம் மகம்மதியர்களின் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தில் மண்ணைப் போடவே அல்லாமல் வேறல்ல,

தென்னாட்டிலும் காங்கிரசுக்குள் சுவாதீன புத்தியுள்ள பார்ப்பனரல்லாதார்களை அண்டவிடாமல்மேல்விசாரணைக்கமிட்டி என்பதாக ஒன்றை நியமித்துத்தடுத்ததுடன் இரண்டுக்குமாக பதினாயிரக்கணக்கான ரூபாய்களை வாரி லஞ்சமாகவும் கூலியாகவும் கொடுத்து "கோடாலிக் காம்புகளாகவும்," 'வயிற்றுச் சோற்று கூலிகளாகவும் உள்ள பார்ப்பனரல்லாதாரை மாத்திரம் வைத்துக்கொண்டு காங்கிரஸ் நடத்துவதின் அவசியமே இதற்காகத்தான்.

இவைகள் எல்லாம் ஒரு புறம் இருக்க காங்கிரசை விட்டு ஓட வேண்டுமென்றே விரட்டி அடித்த பெசண்டம்மையை இப்போது மறுபடியும் காங்கிரசுக்கு கூப்பிடுவதும் அவருக்கு காங்கிரஸ் தலைவர் பட்டம் கட்ட ஸ்ரீமான்கள் மித்திரன் ரங்கசாமி அய்யங்காரும் சத்தியமூர்த்தி அய்யரும் மற்றும் அவர்களது வால்களும் மேல் விழுந்து ஆத்திரப்படுவதும் அதற்காகத்தான். ஏனெனில் சென்னைப் பார்ப்பனர்களின் யோக்கியதையால் காங்கிரசின் யோக்கியதை ஜனங்களுக்கு நன்றாய் வெளியாய் விட்டதுடன் இந்நாட்டில் பார்ப்பனர்களுக்கு பாமர மக்களிடம் சுத்த சுத்தமாய் யோக்கியதையும் போய்விட்டது. ஆதலால் இவர்களுக்கு ஏதாவது ஒரு உதவி வேண்டியிருப்பதாலும்அம்மையாரும் இந்த பார்ப்பனர்களின் தயவால் மறுபடியும் தலைவியாகிவிடலாம் என்கிற ஆசைகொண்டே இப் பார்ப்பனர்களுக்கு மிகுதியும் கவலையுள்ளதாகிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயத்தில் அதற்கு விரோதமாய் இருப்பதாக உறுதிகொடுத்து விட்டதாலும் இனி அம்மைக்குப் பட்டம் கட்டபபடுவது நிச்சயம். பார்ப்பனரல்லாதாரிலும் நிற்க நிலையில்லாமல் தத்தளித்துக்கொண்டிருக்கும் சில மாஜி தலைவர்களும் தங்களுக்கும் மறுபடியும் தலைவர்களாக ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதற்கு அனுகூலமாய் எவ்வளவு தூரம் அம்மையாரைப் பின் பற்றலாமோ அவ்வளவு தூரமும் பின்பற்றி இந்தப் பட்டாபிஷேகத்திற்கு அனுகூலமாகவும்இருக்கலாம். எப்படியிருந்தாலும் நம்மைப்பொருத்தவரையில் ராயல்கமிஷன் வந்தாலும் வராவிட்டாலும் அதில் சில இந்தியர்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கமிஷன் பேயரால் அதிக சுதந்திரம் என்பதாக சில உரிமைகள் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நமக்குக் கவலையில்லை. ஆனால் அவற்றுள் மறுபடியும் நமக்குள் கலகத்திற்கு வழியல்லாமல் மேற் சொன்னமாதிரி எல்லா வகுப்பும் சமமாய் அனுபவிக்கத்தகுந்த சம உரிமையும் சம சந்தர்பபமும் இருக்கின்றதா இல்லையா என்பது தான் முக்கிய கவலை. இந்தத்தத்துவம் மாத்திரம் சரியாக நடக்க-இடமேற்பட்டுவிட்டால் சுயராஜ்யம் என்பதாக யாரையும பிச்சைகேட்க வேண்டிய அவசியமேநோதென்றே சொல்லுவோம்

ஜஸ்டிஸ்

கட்சியாருக்கு ஒரு வார்த்தை.

சாயல் கமீஷனைப்பற்றி ஜஸ்டிஸ் கக்ஷியார்கள் ஒருவித அபிப்பிராயமும் இது சமயம் தெரிவிக்கக்கூடாது என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். பார்ப்பன அரசியல் தந்திரத்தை நாம் பின்பற்றுவதும் அவர்களது இயக்கங்களை நாம் பின் பற்றுவதும் பார்ப்பனரல்லாத சமூகத்தின், தற்கொலையே யாகும்.

நம்நாட்டில்பார்ப்பனர்கள்சம்மந்தப்பட்ட அரசியல் இயக்கங்கள் என்பது எதுவும் கொஞ்சமும் நாணயமுடையதல்ல. அக்கூட்டத்திற்கே இவ்விஷயங்களில் மானம் வெட்கம் நாணயம் முதலியவகைள் கடுகளவும் கிடையாது என்றே சொல்லுவோம். ஏனெனில் இன்று பஹிஷ்காரம் என்பார்கள் நாளை ஏற்றுக்கொள்வது என்பார்கள். இன்று ஒத்துழையாமை என்பார்கள் நாளை ஒத்துழைப்பு என்பார்கள். இன்று முட்டுக்கட்டை என்பார்கள் நாளை சன்னைக்கட்டை போட்டு நடத்திக்கொடுப்பது என்பார்கள். இன்றுநம்பிக்கையில்லை என்பார்கள் நாளைசம்மந்தம் செய்து கொள்ளுவது என்பார்கள். இன்று காங்கிரஸ் கட்டளை என்பார்கள் நாளை காற்றில் பறக்க விடுவார்கள். இன்று வைவார்கள் நாளைக்கு பல்லைக்காட்டுவார்கள். இவ்வளவும் தங்கள் சுயநலத்திற்காகவே செய்வார்கள், எனவே இம்மாதிரி கூட்டத்தில் சேர்ந்தால் தான் வாழ முடியும் என்கின்ற பார்ப்பனரல்லாதார் யாராவது இருப்பாரானால் அவர்களின் நிலை பெரும்பாலும் இதை விட்டால் நாளைக்கு ஜீவனத்திற்கு மார்க்கமில்லை என்கின்றவர்களாகத் தான் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களை மாத்திரம் ஒரு நிபந்தனையின் மேல் பார்ப்பனர்களிடம் செல்ல அனுமதிக்கின்றோம். அதாவது பார்ப்பனர்களைப் போல் எந்த சமயத்திலும் தனது சமூகத்தை காட்டிக்கொடுத்து வாழாமல் பார்ப்பனர்களைப் பற்றி கவிபாடிக்கொண்டோ பார்ப்பனரல்லாதார் சிலரை மாத்திரம் வைது கொண்டோ வயிறு வளர்ப்பதில் நமக்கு ஆக்ஷேபணை இல்லை.

தவிர இது சமயம் பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு பெரிய ஆபத்து இருக்கிறதை முன்னமேயே தெரிவித்திருக்கின்றோம்.

அதாவது பெசண்டம்மையின் புதிய உபத்திரவம் என்னவெனில் நம் நாட்டுப் பார்ப்பனர்கள் இப்போது தங்களுக்குள்ள சகல நாடிகளும் விழுந்துவிட்ட பிறகு அம்மையைப் பற்றி இருக்கின்றார்கள். இனி அது ஒரு ஆட்டம் ஆடித்தான் தன் நிலைக்குவந்து சேரும். யாரும் அதில் ஏமாந்துபோய் விழுந்துவிடக்கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றோம். கோயமுத்தூர் தீர்மானத்தால் ஏற்பட்ட ஆபத்திலிருந்தே இன்னமும் சரியானபடி நாம் மீளவில்லை. இதே சமயத்தில் மற்றொருஏமாற்றம்என்னும் பெசண்டம்மை ஆபத்திலும் யாருடைய சூழ்ச்சியின் பலனுகவாவது மாட்டிக்கொள்வோமானால் பிறகு சுலபத்தில் நமக்கு விடுதலை கிடைப்பதுமன்பது மிகவும் கஷ்டமாகிவிடும். இதுசமயம் நமக்கு யாருடையதயவும் வேண்டியதில்லை. நம்முடைய சுயமரியாதை இன்னது என்பது நமக்கு ஞாபகத்திற்கு வந்தால் அதுவே போதுமானதாகும். "நாட்டிற்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்கு புல் சுமக்கும் தொழில் போகாது" என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல் இந்நாட்டில் பார்ப்பனரல்லாத மக்கள் பெரும்பான்மையும் தோட்டிநிலையிலேயே இருக்கின்றார்கள். அத்தோட்டி நிலைமாற ஏதாவது மார்க்கமுண்டானால் மாத்திரம் எந்தத்துரையையும் எந்த கமீஷனையும் வரவேற்கவும் செய்யலாம் பஹிஷ்கரிக்கவும் செய்யலாம். அதில்லாத பக்ஷம் நாமாக தனித்து நின்று ஒருகை பார்த்து நமது நிலையை மற்றவர்களுக்குச் சமமாக உயர்த்திக்கொள்ள வேண்டிவரும். ஆதலால் அவசரப்பட்டுக் கொண்டு இப்போது எவ்வித அபிப்பிராயத்தையும் தெரிவித்துவிடக்கூடாது என்பதுடன் எந்த அரசியல் கட்சியிலும் சேரக்கூடாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பார்ப்பன சூழ்ச்சி.

நீல் சத்தியாக்கிரக விஷயமாய் பார்ப்பனர்கள் நாட்டில் தங்களுக்கும் இக்காரியத்திற்கும் ஆதரவு இல்லையென்று தெரிந்தே ஸ்ரீமான் காந்தியவர்களின் பெயரை வைத்துக்கொண்டு வெறும் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றார்கள். இது காங்கிரசின்போது வெளி நாட்டிலிருந்துவரும் ஜனங்களை ஏமாற்றுவதற்காகச் செய்யும் சூழ்ச்சியென்பதோடு இம்மாதிரி அனாவசியமான காரியங்களில் சத்தியாக்கிரகம் செய்து சத்தியாக்கிரகம் என்பதின் யோக்கியதையைக் கெடுத்துவிட்டால் நாளைக்கு பார்ப்பனக் கொடுமைகள் நீங்கச் செய்யப்படும் சுயமரியாதை சத்தியாக்கிரகத்திற்கும் ஜனங்களின் ஆதரவு இல்லாமல் போகட்டும் என்கின்ற கெட்ட எண்ணத்தின்பேரில் செய்யும் காரியமென்றுமே சொல்லுவோம். இனியும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி இவர்கள் சூழ்ச்சியும் ஏமாற்றமும் செய்யக்கூடுமென்பதையும் இக்கூட்டத்திற்கு எத்தனை நாளைக்குத்தான் ஸ்ரீமான் காந்தி உதவிசெய்து வருவார் என்பதையும் பொறுமையோடு பார்த்து வருவோமாக.

சந்தேகம் உறுதியாய் விட்டது.

ஸ்ரீமதிகள் அலமேலுமங்கை கண்ணு அம்மாள் பார்வதி அம்மாள் ஆகிய இரு பெண்கள் பேரால் பொட்டுக்கட்டும் வழக்கத்தை நிறுத்துவதால் தங்கள் சமூகத்திற்கு கேடு வரும் என்று ஸ்ரீமதி முத்துலக்ஷ்மிஅம்மாள் அவர்கள துமசோதாவுக்கு எதிர்பிரசாரம்செய்ய வந்த காரியங்களை நாம்பார்த்த உடனேயே இக்காரியங்கள் அவர்களால் நடைபெறுவதல்ல என்றும் இதற்கு பின்னால் ஏதோ ஒரு கூட்டம் ஆண்கள் இருந்து செய்திருக்கவேண்டும் என்றும் சந்தேகப்பட்டோம். அப்படி சந்தேகப்பட்டது சரி என்று மெய்ப்பிக்க இப்போது ஆதாரங்கள் கிடைத்துவிட்டன. என்னவென்றால் சுயராஜ்ஜிய கக்ஷி உயிர் நிலையான ஸ்ரீமான் சத்திய மூர்த்தி அவர்கள் சுயராஜ்ஜியக் கக்ஷி தலைவர் வீட்டில் பேசியபோது குறிப்பிட்ட வாசகங்களிலிருந்தே ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கூட்டத்தாருடைய தூண்டுதலாகத் தான் இருக்கவேண்டும் என்று நம்ப இடமேற்படுகிறது. ஆதலால் இம்மாதிரி ஆக்ஷேபங்களை பொது ஜனங்கள் லக்ஷ்யம் செய்யமாட்டார்கள் என்றே எண்ணுகின்றோம்.

திருவண்ணாமலை கோவில் வழக்கு நிதி.

இந்நிதிக்குச் சிங்கப்பூர் சுயமரியாதை வீரர் கோ. சாரங்கபாணி நாயுடு அவர்கள் ரூபாய் 100 வசூலித்து நமக்கு அனுப்பியுள்ளார். அதை வந்தனத்துடன் ஏற்று ஸ்ரீமான் கண்ணப்பர் அவர்களுக்குச் சேர்த்து விட்டோம.

பிச்சைக்காரன் விடுதி.

வருகிற திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்கு ராயபுரம் கார்ப்பொரேஷன் டிஸ்பென்சரிக்கு அருகிலுள்ள சூரியநாராயண செட்டித் தெருவிலுள்ள கவர்ன்மெண்டு கட்டிடத்தில் சென்னை கார்ப்பொரேஷனால் பிச்சைக்காரர்கள் விடுதி ஒன்று ஏற்படுத்தப்படும். சென்னை பல்கலைக்கழக வைஸ்சான்சலர் திவான் பகதூர் சர். ஆர் வெங்கட்டரத்தினம் நாயுடு அவர்கள் அந்த விடுதியை த்திறந்து வைப்பார்.

திருமணம்.

கோலாலம்பூரைச் சார்ந்த ரவ்வில் (RAUB) நவம்பர் 7-ல் திருவாளர் M. குப்புஸாமி நாயுடு அவர்கள் குமாரன் சிரஞ்சீவி M. K. ராமச்சந்திர நாயுடு அவர்களுக்கும் திருவாளர். R. M. S. முத்துகிருஷ்ண நாயுடு அவர்கள் புத்ரி சௌபாக்கியவதி ரெங்கநாயகி அம்மாளுக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வேண்டுகோள்

ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித்து அதனை வளர்க்க முயன்று வரும் சங்கங்கள் கழகங்கள், வாசகசாலைகள் ஏனைய பொதுஸ்தானங்கள் யாவும் தங்களுடைய முழுவிலாசங்களையும் அடியிற்கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கவேண்டுகின்றோம்

காரியதரிசி

காரைச் சிவனடியார் திருக்கூட்டம்

காரைக்குடி.

நாகை ஆதிதிராவிட மகாஜன சபையார்.

நாளது நவம்பர் மாதம் 2-உ டிஷ சபையார், இந்திய நிர்வாக சபை அங்கத்தினரான கனம் சர். முகமத் ஹபிபுல்லா சாகிப் K. C. S. I, K. C. I. E., Kt. அவர்களை நாகையில் வரவேற்று ஒரு வரவேற்புப் பத்திரிகை வாசித்துக்கொடுத்தார்கள்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது மாதரின் அறியாமையாலும், எதிர்ப்பாலும்தான் இவ்வகையில் சீர்திருத்தஞ் செய்யக்கூடவில்லை என்பது உண்மை. ஆகிலும், ஜாதிக்குள்ளேயேதான் விவாகஞ் செய்யவேண்டுமென்ற அபிப்பிராயம்விசேஷமாய் ஆடவர்களுக்குள்ளும் பரவியிருப்பதால் வேறு ஜாதிப் பெண்களையோ, பையன்களையோ தேடி மணம் புரிவிக்க ஒரு சிறிதும் சிரமமே படுகிறதில்லை.

இதர சமூக ஊழல்கள்

இதனால் ஜாதியபிமானம் இன்னும் பலமாக வேரூன்றியிருப்பதுடன், இதர சமூக ஊழல்களும் புதிதாய்த் தோன்றுகின்றன. கல்வியில் தேர்ந்த வாலிபர்கள் பெரிய தொகைகளை வரசுல்கமாகக் கேட்பதுதான் இதில் மிகவும் கொடுமையானது. ஜாதி சபைகளாலும், மகாநாடுகளாலும் கிளை ஜாதிகளுக்குள் இருந்து வரும் வித்தியாசமாவது ஒழியும் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதுவும் ஒன்றும் ஆகவில்லை. ஜாதி இறுமாப்பையும், வித்தியாசத்தையும், துவேஷத்தையும் அதிகரித்ததேயன்றி கிளைஜாதிகளை ஒழிக்கவில்லை. முதலில் இக்கிளை ஜாதிகளை ஒழித்து விட்டால் மற்ற சீர்திருத்தங்கள் எளிதில் செய்துகொள்ள முடியும். சாதாரணமாய் பொது ஜன அபிப்பிராயத்தைத் திருப்புவதால் மட்டும் சீர்திருத்த முடியாது. சட்ட சபை மூலம் செய்யக்கூடியதும் சீர்திருத்தத்தை அனுமதிக்கலாமேயன்றி வற்புறுத்த முடியாது. உண்மையில் இன்னும் அதிகமான வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. கிளை ஜாதிகளை யொழிக்க ஒற்றுமையுடன் பெரியசங்கங்கள் அமைத்து வேலைசெய்யவேண்டும். வைசியர்களில் உள்ள பல உட்பிரிவுகளைச்சேர்த்து விவாக விஷயத்தில் ஜாதிக் கட்டுப்பாடுகளை ஒழிக்கிறதென்று பிரதிக்ஞை செய்துகொண்டு, அதைக் காப்பாற்ற தீவிரமாய் வேலைசெய்தால், கூடிய சீக்கிரத்தில் இந்த தீமையை விலக்கிவிடலாம். இத்தகைய சீர்திருத்தத்தை நமது மாதர்களைத் தவிர, கிழட்டுப் பெற்றோர்களும், பாட்டன் பாட்டிமார்களும் எதிர்த்து வருகிறார்கள். ஆனால் இத்துறையில் வெற்றிபெற வேண்டுமாயின் இத்தனையையும் தாங்கிநின்றுபோர் புரிந்துதானாகவேண்டும்.

ஜாதி வித்தியாசங்கள் அரசியலில் பெருங்கேடு விளைத்து, அதைக் குலைத்து வருவதை எவரும் மறுக்க முடியாது. பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற பிளவும், காயஸ்தர்கள்—பூமிஹார்கள் என்ற வேற்றுமையும், ஜாட்கள்—ஜாட்களல்லாதார் என்ற பிரிவும், இவையெல்லாம் ஜாதிக் கொடுமையால் தோன்றியவைதான். ஹிந்துக்கள் ஒரு ஐக்கியப்பட்ட ஜன சமூகமாய் பலத்துடன் வாழ வேண்டுமானால் ஜாதிப் பிரிவுகள் ஒழியவேண்டும். இந்தியா உண்மையான ஜன நாயகம் பெறவேண்டுமெனில், ஜாதிக் கட்டுப்பாட்டை அடியோடு தொலைக்க வேண்டும்.

“தமிழ் நாடு”

சென்னை கார்ப்பரேஷனும் வகுப்பு வாதமும்.

சென்னை கார்ப்பரேஷனுக்கு தலைவர் தெரிந்தெடுக்கவேண்டிய சடங்கு இம்மாதத்தில் நடக்கவேண்டும்.

சென்னை முனிசிபாலிட்டியில் இது சமயம் உள்ள 50 கவுன்சிலர்களில் பார்ப்பன கக்ஷியில் சுயராஜ்யக் கக்ஷிக்கும் சுயேச்சை கக்ஷிக்குமாக சுமார் 20 கவுன்சிலர்கள் இருக்கின்றார்கள். பார்ப்பனரல்லாதார் கக்ஷிக்கும் சுமார் இருபது கவுன்சிலர்கள் இருக்கின்றார்கள். மீதி வெள்ளைக்காரர்களாக இருக்கின்றார்கள். ஆகவே எந்த கக்ஷியாரும் வெள்ளைக்காரர்கள் தயவு இருந்தால் தான் வெற்றிபெற முடியும். இந்த நிலையில் வெள்ளைக்கார கவுன்சிலர்கள் இரண்டு கக்ஷித் தலைவர்களையும் தங்கள் முன் வந்து அவரவர்கள் கொள்கைகளை உபந்நியாசம் செய்யும்படிக்கும் அதில் யார் வெள்ளைக்காரருக்கு அனுகூலமாயிருக்கின்றார்களோ அவர்களுக்கு தங்கள் ஓட்டை கொடுப்பதாகவும் சொன்னார்கள். அவர்கள் பேச்சை நம்பி இரண்டு கக்ஷிக்காரரும் அதாவது பார்ப்பனரல்லாத கக்ஷிக்காக முக்கியமாய் பனகால் ராஜவும் பார்ப்பனக்கக்ஷிக்காக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரும் பேசினார்கள். மற்றும் ஸ்ரீமான்கள் பாத்ரோவும் சாமி வெங்கிடாசலம் செட்டியாரும் முறையே பேசியிருந்தாலும் முன் சொன்ன இருவர்கள் பேசினதையே பிரதானமாய் வைத்து பார்த்ததில் ஒருவரைவிட ஒருவர் பேசினது ஜாக்கிரதையாகவும் இரண்டர்த்தம் கொடுக்கக்கூடியதாகவும் வெள்ளைக்காரரையும் ஜனங்களையும் ஏமாற்றக்கூடியதாகவும் இருந்ததே தவிர ஒன்றும் வெள்ளைக்காரரால் மதிக்கப்படவில்லை. காரணம் என்னவெனில் இந்த இரண்டு கக்ஷிக்கும் ஓட்டு கொடுப்பதற்கு வெள்ளைக்காரருக்கு இஷ்டமில்லை. என்னவென்றால் கோயமுத்தூர் மகாநாட்டில் கவர்னர் பிரபு பேரில் நம்பிக்கை இல்லாத தீர்மானம் நிறைவேற்றியதால் பார்ப்பனரல்லாதார் கக்ஷி மேல் இருந்த நம்பிக்கை வெள்ளைக்காரருக்கு விட்டுப்போய் விட்டது. சுயராஜ்யக் கக்ஷி கவுன்சிலர்கள் மானம் மரியாதை இல்லாமல் இழிமொழிகள் பரிமாறிக்கொண்டு மீன்கடை கள்ளுக்கடை போல் கலகம் செய்வதால் அவர்களுக்கு ஓட்டு கொடுக்கவும் இஷ்டமில்லை, இதுவும் தவிர சுயராஜ்யக்கக்ஷியார் வெள்ளைக்காரர் ஓட்டுப்பெறுவதாயிருந்தாலும் அது ஒரு பார்ப்பனருக்கு வருவதற்கு இல்லாமல் இந்தத் தடவையும் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியாருக்கே போக வேண்டியிருக்குமாதலால் சுயராஜ்ஜிய கக்ஷியில் உள்ள பார்ப்பனக் கவுன்சிலர்களுக்கு தங்கள் கக்ஷியார் பேரால் ஆளை நிறுத்தவும் மனமில்லாமல் சூழ்ச்சி செய்து எப்படியாவது அது இந்த தடவை ஒரு பார்ப்பனருக்கு போகும்படி செய்யவேண்டும் என்பது அவர்களுடைய கருத்து. இந்த நிலையில் ஜி. ஏ. நடேசய்யர் என்கின்ற ஒரு பார்ப்பனரை சுயராஜ்யக் கக்ஷி பார்ப்பனர்கள் ரகசியமாய் தூண்டிவிட்டு அவரைக்கொண்டு வெள்ளைக்காரர் ஓட்டுகளை சரி செய்யச் செய்து தாங்களும் உதவி செய்வதாய் வாக்களித்து (ஏனென்றால் ஸ்ரீமான் நடேசய்யருக்கு ஓட்டு செய்யாவிட்டால் ஜஸ்டிஸ் காரர்கள் வந்து விடுவார்கள், ஆதலால் ஜஸ்டிஸ் காரர்கள் வராமலிருப்பதற்கு வேறு ஒரு கக்ஷிக்காரருக்கு ஓட்டு செய்தோம் என்று சொல்லிக்கொள்ளலாம் என்கிற சாக்கின் பேரில்) அவரையே தலைவராக்க வெகுபிரயத்தனங்கள் செய்கின்றார்கள். இந்தச் சூழ்ச்சி அறிந்த ஜஸ்டிஸ் கக்ஷியார் தங்கள் ஓட்டுகளை தாங்கள் வருவதற்கு இல்லாவிட்டால், ஒரு பார்ப்பான் வருவதைவிட பார்ப்பனரல்லாத யாராவது வரட்டும் என்கின்ற எண்ணத்தின் பேரில் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியாருக்கு ஓட்டு செய்வதாய் ஒப்புக்கொண்டு அவருக்கு வலுவில் சொல்லியுமனுப்பிவிட்டார்கள். இது தெரிந்த வெள்ளைக்காரர்களும் பார்ப்பனர்களும் இஞ்சிதின்ற குரங்கைப்போல் விழிக்கிறார்கள். எப்படியாவது பார்ப்பானை இந்தத்தடவை தலைவராக்கவேண்டுமென்கின்ற எண்ணத்தின் பேரில் பார்ப்பனர்கள் ஒரு புது யோசனை கண்டு பிடித்திருக்கின்றார்கள். அதாவது ‘ஜஸ்டிஸ் கக்ஷியார் நல்ல எண்ணத்தின் பேரில் தங்கள் கக்ஷிக்கு ஓட்டு செய்ய வரவில்லை, வகுப்பு துவேஷத்துடன் பார்ப்பான் வரக்கூடாது என்கின்ற எண்ணத்தின் மேல் சாமி வெங்கடாசலம் செட்டியாருக்கு ஒரு பார்ப்பனரல்லாதார் என்கின்ற முறையில் ஓட்டு செய்ய வருகின்றார்கள். ஆதலால் அம்மாதிரி ஓட்டுகளை பெறுவதின் மூலம் வகுப்பு துவேஷத்தை வளர்ப்பதற்கு இடம் தரக்கூடாது. எப்படியாவது பாடுபட்டு வகுப்பு துவேஷம் ஒழிவதற்கு அனுகூலமாய் இந்தத் தடவை ஒரு பார்ப்பனருக்கே தலைவர் பதவி செய்துவைக்கவேண்டும்’ என்று தர்ம நியாயம் பேசுகிறார்கள் பார்ப்பனர்கள் தயவினாலும் பணத்தினாலும் ஸ்தானம்பெற்ற பார்ப்பனரல்லாத கவுன்சிலர்கள் சிலரும் இதற்கு ஆமா ஆமா போடுகிறார்கள்

என்ன சொன்னாலும் ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியாரை சுலபத்தில் ஏமாற்றமுடியாது. ஆதலால் முடிவு எப்படியாகுமோ சொல்ல முடியாது. என்ன ஆவதானாலும் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு தலைவர் ஸ்தானம் கிடைப்பது கஷ்டமென்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் வெள்ளைக்காரர்கள் சுயராஜ்ய கக்ஷிக்காவது ஓட்டுச்செய்து கவுன்சில் மீட்டிங்கில் போது காதையும கண்ணையும் மூடிக்கொள்ளவோ எழுந்து ஓடிவிடவோ செய்வார்களேயல்லாமல் கவர்னர் பேரில்நம்பிக்கைஇல்லாத தீர்மானம்செய்து இரட்டை ஆட்சியை ஒழிக்கின்றவரைஉத்தியோகம் ஒப்புக்கொள்வதில்லை என்று சொன்னவர்களுக்கு ஓட்டுச்செய்யவே மாட்டார்கள் என்று தோன்றுகிறது.

எது எப்படியானாலும் அதில் நாம் போற்றுவது ஒன்று. அதாவது கக்ஷிபேதம் பாராட்டாமல் எதிர் கக்ஷியாய் இருந்தாலும் அதை லக்ஷியம செய்யாமல் பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சியின் பேரில்

மதிப்புரை
ஞான சூரியன்.

ஸ்ரீலஸ்ரீ சிவாநந்த சாஸ்வதி ஸ்வாமிகளால் எழுதப்பட்டு ஸ்ரீமான் கானாடுகாத்தான் வயிசு ஷண்முகம் செட்டியார் அவர்களால் பொது நன்மையை உத்தேசித்து அச்சிடப்பட்ட 'ஞான சூரியன்' என்னும் புத்தகம் நமது பார்வைக்கு வந்தது. அப்புத்தகம் தமிழ் நாட்டு மக்கள் அவசியம் படித்துப்பார்க்கவேண்டியவைகளில் ஒன்று என்றே சொல்லுவோம்.

இதைப் படித்துப் பார்த்தால் வேதம் என்று சொல்லுவதில் உள்ள ஆபாசங்கள் வெளியாவதுடன் வேதத்தை ஏன் ஒரு வகுப்பார் தவிர மற்றவர்கள் படிக்கக்கூடாதென்று ஆதியிலிருந்தே பார்ப்பனர்கள் சூழ்ச்சிசெய்து வந்திருக்கிறார்கள் என்பதும் நன்றாய் விளங்கும். ஸ்ரீலஸ்ரீ சுவாமி அவர்கள் இதில் பெரும்பாகம் வேதத்தில் உள்ள சுலோகங்களையும் மற்றும் வேதத்தை ஆதாரமாய்க்கொண்ட சமஸ்கிருத நீதிநூல்கள் என்பவைகளில் உள்ள சுலோகங்களையும் எடுத்து எழுதி அதற்கு அர்த்தம் எழுதியிருப்பதுடன் ஆரியர்களான பார்ப்பனர்களின் அநாகரீகத்தையும் அவர்களது காட்டுமிராண்டித்தனத்தையும் சுயநலத்தையும் நன்றாய் விளக்கியிருக்கின்றார். இதை ஒரு தடவை வாசித்துப்பார்த்தவன் நேருக்கு நேராக விமானம் வந்து தன்னை கூட்டோடு மோக்ஷலோகத்திற்கு அழைத்துக்கொண்டு போவதானாலும் தான் இந்து என்றோ வேதத்தையும் ஸ்மிருதிகளையும் நம்புபவன் என்றோ சொல்லிக்கொள்ள ஒரு கணமும் சம்மதிக்கமாட்டான். எனவே உண்மையான தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இப்புஸ்தகத்தை ஒரு தடவை படித்துப் பார்க்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகின்றோம். விலை ரூ. 1. கிடைக்குமிடம்:—

ஸ்ரீமான் வயிசு ஷண்முகம் செட்டியார்,
கானாடுகாத்தான், (ராமநாதபுரம் ஜில்லா.)

மதுரை நாடார் மகாஜன சங்கம்.

கும்பகோணத்தில் நடைபெற்ற நாடார் மகாஜன சங்கம் 11-வது மகாநாட்டின் வரவுசெலவு கணக்குகளும் ரிப்போர்ட் புத்தகங்களும் மீதி ரூ, 349-14-3-ம் நமது சங்கம் டிராவலிங் ஏஜண்டு ஸ்ரீமான் A. M. S. அய்யாமலை நாடார் அவர்கள் மூலம் வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

மகாநாட்டை சிறப்பாகவும், நேர்மையாகவும் நடத்தி இனி மகாநாடு நடத்துகிறவர்களுக்கு முன் மாதிரியாக ரிப்போர்ட்டை அதிசீக்கிரமாய் முடித்தனுப்பிய உபசரணைக் கமிட்டியாரவர்களுக்கு நமது சந்தோஷமான வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

ரிப்போர்ட் புஸ்தகம் தேவையுள்ளவர்கள் அரை அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

காரியதரிசிகள்,
நாடார் மகாஜன சங்கம்.

ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியாருக்கு ஓட்டுக்கொடுப்பதாய் வலுவில் சொல்ல தைரியமாய் முன்வந்த பார்ப்பனரல்லாதார் கக்ஷியின் உணர்ச்சியை நாம் மனதார பாராட்டுகின்றோம்.

"குடி அரசு" வாழ்க.

வெண்பா.

அன்புடையீர் உம்மாலனுப்புங் குடியரசைத்
தென்புடனே பெற்றித் தினமகிழ்ந்தேன்—
என்புகல்வேன்
பற்றலராம் பார்ப்பனரால் பாடுபடும் பார்
உற்றவமு தென்பேன் உவந்து. [தனக்கு

கண்டோர்க் கிதயங் களிக்குமன்போடுகரங்
கொண்டோர்க்கு மேனி குளிருமே—
விண்டோர்க்
கிடாகற்றி நம்மவர்கட் கின்பளிக்கு மிந்தக்
குடியரசில் உள்ள குணம்.

தந்திரத்தால் நம்மையெலாந் தாழ்மையுற
வே செய்த
அந்தணருக்கிந்நாள் அசனியென—சொந்தக்
குடிஅரசுத் தோன்றியதுங் கூறுமுலகஞ்
செடிய தவந்தானென்பனே. [செய்

—— எ. எம். நடராஜன்.

நெல்லூரில் கொடும்புயல்

சென்ற நவம்பர்மாதம் முதல் தேதிபன்று நாயுடு பேட்டையிலிருந்து தெட்டு வரையில் சுமார் 70 மைல் தூரத்திற்கு புயலின் கொடுமையால் ஒரே பாழ்வனமாகிவிட்டது. இதில் நெல்லூர் தான் பெரிய நகரமாகையால் அங்குதான் சேதமதிகம்.

ஒரு மரமாவது தோட்டமாவது உருப்படியாக இல்லை. ரயில்வேஸ்டேஷனுக்கருகிலுள்ள பாலம் கூட்ஸ் ஷெட்டு B. O. C. சீமை எண்ணைக்கிடங்கு, (டாங்கி) மிஷன் ஆஸ்பத்திரி, ஜில்லா கோர்ட்டு, முன்சீப் கோர்ட்டு, தாலூகாகச்சேரி, நகரமண்டபம் மணிக்கூண்டு, 16 அரிசிமில்கள் ஏராளமான பெரிய சிறிய கட்டிடங்கள் அழிந்தும் சேதப்பட்டும் போயின. மொத்தத்தில் 100 க்கு 95 கட்டிடங்கள் சேதமடைந்து விட்டன.

உயிரிழந்தவர்களின் தொகை இன்னும் சரியாய் மதிப்பிடுவது சிரமமாயிருக்கிறது. இதுவரையில் 22 மரணவிசாரணைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. பலர் காணப்படவில்லை.

ஜல சப்ளை நின்றுவிட்டது. கவர்மெண்டு ஆபீஸுகளும், பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டிருக்கின்றன. நெல்லூரிலிருந்து எப்பக்கத்திற்கும் தந்திப் போக்குவரத்தே இல்லை. இறந்து போன கால் நடைகள் ஆங்காங்கே கிடக்கின்றன. நெல்லூரில் மட்டும் சேதம் சுமார் 30 லட்சம் ரூபாய்க்குக்குறையாது என மதிப்பிடப்படுகிறது.

கொழும்பு "தேச பக்தன்" எங்கே?

கொழும்பிலிருந்து ஸ்ரீமான்கள் நடேச அய்யரவர்களும் செல்லய்யா அய்யரவர்களும் இம்மலாய் நாட்டில் வந்து தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்துவதற்காக "தேச பக்தன்" என்ற தமிழ்ப் பத்திரிகையை நடத்திவருவதாக ஆங்காங்கு வாய்ப்பறை சாற்றி "தமிழர்கள் வீட்டிலும் சாப்பிடுகின்றேன். என்னுடைய ஒற்றுமையைப் பாருங்கள்" என்று பசு புலித்தோல்போர்த்துக்கொண்டு பாசாங்கு செய்த கதையைப் போல தமிழ் மக்களிடத்தில் ஒரு வருடத்தின சந்தாவுக்கென்று வெள்ளி $ 11 வீதம் அநேகம் பேர்களிடத்தில் ரொக்கமாக வாங்கிக்கொண்டு போய் நாலைந்து வாரப்பத்திரிகை மட்டும் அனுப்பினர். பின் பத்திரிகை அனுப்பாமல் நிறுத்திவிட்டார். என்ன காரணத்திற்காக பத்திரிகை அனுப்பாமல் நிறுத்திஇருக்கிறாரென்று புலப்படவில்லை. பத்திரிகையை அனுப்பாதவர் வாங்கிப்போன சந்தா தொகைகளை சென்ற தேதிவரை திருப்பி அனுப்பவுமில்லை. எழுதிய கடிதங்கட்கு பதிலுமில்லை. இரண்டொரு பத்திராதிபர்களிடத்தில் கொழும்பு தேச பக்தனுடைய க்ஷேமத்தை விசாரித்ததற்கு, க்ஷேமத்துடன் "தேச பக்தன்" பத்திராதிபர் இருக்கிறாரென்பதாக விடையளித்தார்கள். கொழும்பு "தேச பக்தன்" உயிருடன் வெளிவந்து உலாவினால் மலாய் நாட்டின் சந்தாதாரர்களிடத்தில் மட்டும் வாராமல் மறைந்து போவானேன்? நமது அன்புமிகுந்த "தேசபக்தன்" இப்போது நிறை ஆயுளோடு அச்சு வாகனத்திலேறி பவனி வருவதை யாரேனும் பார்த்ததுண்டோ?

கொழும்பு "தேச பக்தன்" பூரண ஆயுளோடு அச்சு வாகனத்திலேறி தேச சஞ்சாரஞ் செய்து வருகிறாரா என்பதை இம்மலாய் நாட்டிலுள்ளவர்கள் யாவருமறிந்து சந்தோஷம் கொண்டாட வேண்டும். இல்லையேல்? மற்றொன்று கொண்டாடவேண்டும்.

அன்பர்கள் தயவு கூர்ந்து, கொழும்பு "தேச பக்தன்" உயிருடன் க்ஷேமமாயிருக்கிறாரா? எவ்விடத்திலிருக்கிறார்? என்ற விபரம் இப்பத்திரிகை மூலம் தெரியச்செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

"மலாய் நாடு"

திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான
சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர்ஜவுளிதினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)

நவம்பர் மாதம் 5, 6 தேதிகளில்
திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை
அவர்கள் தலைமையில் நடைபெற்ற

சேலம் 3-வது அரசியல் மகாநாடு.

சேலம் ஜில்லா 3-வது அரசியல் மகாநாட்டின் தலைவர் அவர்களையும் மற்றைய அரசியல் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் சிறப்புடன் வரவேற்பதற்காக வேண்டிய ஏற்பாடுகள் 2 நாள் முன்னிருந்தே நடைபெற்றது. நகர்முழுதும் வளைவுகளாலும் தோரணங்களாலும் அலங்காரமாய் சிங்காரிக்கப்பட்டிருந்தது. மகாநாட்டுத் தலைவர் திரு. வி. ஒ. சிதம்பரம் பிள்ளை அவர்களை காலை 9 மணிக்கு சேலம் டவுன் செவ்வாய்ப்பேட்டை தேர் நிலையிலிருந்துமுதல்அக்கிராரம் கடைவீதி வழியாய் பாண்டு வாத்தியங்களுடன் ஊர்வலமாய் அழைத்து வரப்பட்டது தலைவர் திரு. சிதம்பரம் பிள்ளை அவர்களும் வரவேற்பு கமிட்டித் தலைவர் திரு. தம்மண்ண செட்டியார் அவர்களும் முன்னணியிலும் ஈரோடு குடிஅரசு ஆசிரியர் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் திரு ஆர் கே ஷண்முகம் செட்டியார் அவர்கள் டாக்டர் வரதராஜலு நாயுடு அவர்கள் பின்னணியிலும் இரண்டு மோட்டார்களில் வரவும், முன்னால் மாணவர்கள் உள்பட பல வாலிப தொண்டர்கள் அணிவகுத்து வழி விலக்கவும், பிரபலஸ்தர்கள் புடைசூழவும், ஊர்வலம் சுமார் 3000 ஜனங்களடங்கிய பெருங் கோஷ்டியாய் ஜே கோஷங்களுடன் புறப்பட்டு வந்தது. ஊர்வலம் 11 மணிவரையில் நடை பெற்றது. பின்னர் தலைவர்கள் ஜாகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்

எலெக்டிரி தியேட்டரில் மகாநாடு ஆரம்பம்:

மகாநாடு பகல் 2 மணிக்கு ஆரம்பம் என்றிருந்தாலும் மகாநாடு ஆரம்பமாக மாலை 3 மணி ஆய்விட்டது, தலைவர் வருவதற்கு முன்னர் கொட்டகையில் பிரதிநிதிகளும் விசிட்டர்களும் நிறைந்து விட்டார்கள். தலைவர் கரகோஷத்துடன் வரவேற்கப்பட்டு ஆசனத்திலமர்ந்தார். மேடையில் பலஇடங்களிலிருந்தும்வந்தவரவேற்புகமிட்டி அங்கத்தினர்களும் தலைவர்களும் நிறைந்திருந்தார்கள், அவர்களில் கீழ்க்கண்டவர்கள் முக்கியஸ்தர்கள், திரு பிஞ்சல சுப்பிரமணிய செட்டியார் ராவ்சாகிப் எல்லப்ப செட்டியார் எம் எல், சி. திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார், எம். எல். ஏ, திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு. தெண்டபாணிபிள்ளை. திருவாளர்கள் டி, எஸ், ஜெகராஜ் பி ஏ பி எல், கே. நரசிம்மய்யங்கார் பி ஏ, பி எல், எம் சாமிநாதய்யர் பி ஏ, பி எல், கே சிவ சங்கர முதலியார் டாக்டர் ரங்கய்ய நாயுடு பி. இராஜமாணிக்கம் பண்டாரம், டி வி பங்காரு செட்டியார், ஏ கே சுந்தரய்யசெட்டியார், கே எஸ் அருணாஜலம் செட்டியார, எஸ் பெரியசாமி முதலியார், என் கே சடகோப முதலியார், நாமக்கல் உஸ்மான் சாயபு, புரொபசர் ராமமூர்த்தி, ஆத்தூர் அப்துல் அமித் சாயபு, ஏ வையாபுரி பண்டாரம், பூபதி கந்தசாமி பிள்ளை, எஸ் பி பொன்னுசாமி முதலியார், கே மாரிமுத்து முதலியார், பாப்பாபட்டி சின்னமுத்து முதலியார், ராமசந்திர நாயுடு, பி ஸ்ரீராமலு செட்டியார், பி ஏ. பி எல் சித்தி ராஜு, கோவிந்தசாமி நாயுடு, சிவப்பெருமாள் பிள்ளை, ஒபிளிசெட்டியார், கதிர் செட்டியார் ஜெகநாதசெட்டியார் அங்கமுத்து முதலியார், ஏத்தாபூர் நாராயணசெட்டியார் பி சிவராவ் எம் எல் சி, முதலிய முக்கியஸ்தர்கள் வந்தார்கள்.

முனிசிபல் சேர்மனும் வரவேற்பு கமிட்டித் தலைவருமான எஸ் தம்மன்ன செட்டியார் பிரதிநிதிகளை வரவேற்று தம் பிரசங்கத்தை வாசித்தார். மகாநாட்டுக்கு வர முடியாதவர்கள் அனுப்பிய தந்திகளை வாசித்தார்.

பின்னர் டாக்டர் நாயுடு அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமைவகித்த திரு, வி. ஒ. சிதம்பரபிள்ளை அவர்களைப்பிரேரேபிக்கராவ் சாகிப் எல்லப்ப செட்டியார் ஆமோதிக்க திருவாளர்கள் வெங்கடாஜல ரெட்டியார் நாமக்கல் உஸ்மான் சாயபு, எம். சாமிநாதய்யர், ஆர். கே. ஷண்முகம் செட்டியார், ஈ. வெ. ராமசாமி நாயக்கர் இவர்கள் ஆதரிக்க தலைவர் அவர்கள் கரகோஷத்தினிடையே பதவியை யேற்று தமது அக்கிராசனப் பிரசங்கத்தை வாசித்தார். குறிப்பு:— மற்றய நடவடிக்கைகளும் அக்கிராசனப் பிரசங்கமும் அடுத்த வாரம் வெளிவரும்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) இந்திய சமூக வளர்ச்சிக்கும் சுயராஜ்யம் விரைவில் பெறுவதற்கும், ஜாதி வித்தியாசம் முதலிய சமூக ஊழல்களை ஒழிப்பதில் காங்கிரஸ் தலையிட வேண்டியது அவசியமாயிருப்பதால், அதற்கு அநுகூலமாக காங்கரஸ் விதிகளை அமைத்து சமூகச் சீர்திருத்தம் செய்ய முயலுவதாக காங்கிரஸ் மெம்பர்கள் வாக்குறுதியளிக்குமாறு செய்யவேண்டுமென்று இந்த மகாநாடு அபிப்பிராயப் படுகிறது,

(2) வரப்போகும் ராயல் கமிஷன் பார்லிமெண்டு மெம்பர்களடங்கிய ஒரு கமிஷனாக இருக்குமென்று கேட்டு இந்த மகாநாடு வருந்துவதுடன் போதுமான அளவுக்கு இந்தியப் பிரதிநிதிகள் கமிஷனில்இல்லாவிட்டால் தேசத்தாருக்கு கமிஷன் திருப்திகரமாயிருக்காதென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

3. (அ) கௌசத்தி காங்கிரஸ் கட்டளைக்கு விரோதமாக சட்டசபை மெம்பர்களுக்கு அகில இந்திய காங்கிரஸ் காரிய கமிட்டியார் உத்தரவுகள் அனுப்பியதை இந்த மகாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. (ஆ) சென்னை காங்கிரஸ் கட்சி மெம்பர்களில் சிலர் மந்திரி பதவி ஒப்புக்கொள்வதற்கு அனுகூலமுடையவராகக் காணப்படுவதால், காங்கிரஸ் கட்சியார் உத்தியோகம ஒப்புக்கொள்ளுவது தேர்தல் வாக்குறுதிக்கு விரோதமானதென்றும், அடுத்த காங்கிரஸ் உத்தியோகம் ஒப்புக்கொள்ளும்படி தீர்மானம் செய்தால் உத்தியோகம் ஒப்புக்கொள்ள விரும்பும் சட்டசபை மெம்பர்களை ராஜிநாமா செய்யச்சொல்லி மீண்டும் தேர்தலுக்கு நிற்குமாறு தூண்ட வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

4. "காமன் வெல்த் ஆப் இந்தியா" மசோதாவைப் பரிசீலனை செய்து அது சர்வஜன சம்மதம் பெற ஏதேனும் திருத்தங்களோ மாற்றங்களோ தேவையாயிருந்தால் அவைகளைக் குறிப்பிடுமாறு காங்கிரஸ் ஒரு கமிட்டியை நியமிக்கும்படி இம்மகாநாடு தீர்மானம் செய்கிறது. இந்த மசோதா விஷயத்தில் டாக்டர் பெசண்டு எடுத்துக்கொண்ட அரிய முயற்சிகளை இம்மகாநாடு மிகவும் பாராட்டுகிறது.

5. (அ) இந்த நாட்டிலுள்ள ஜனங்களை சமூக விஷயங்களில் அடிமையாக வைப்பதற்குக் காரணமாயிருக்கும் வருணாசிரம தர்மத்தைப்பற்றி மகாத்மா தென்னாட்டுப் பிரயாண காலத்தில் பிரசாரம் செய்ததற்காக இம்மகாநாடு வருந்துகிறது.

(ஆ) தீண்டாமை யொழித்தல், பிறப்பினால் உயர்வு தாழ்வுண்டென்னும் உணர்ச்சியை நீக்கல், முதலியவைகளுக்காக எல்லா இந்துக்களும் பிரசாரம் செய்து சுயமரியாதை உணர்ச்சியை விருத்திசெய்ய வேண்டுமென்று இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. தேவையானால் எங்கும் சத்தியாக்கிரக ஆசிரமங்கள் ஸ்தாபனம் செய்யவேண்டுமென்றும் இந்த மகாநாடு அபிப்பிராயப் படுகிறது.

(6) ஆலயங்களில் பூசை செய்யும் உரிமையை சிலர் கைப்பற்றி எல்லா ஜனங்களுக்கும் அவ்விஷயத்திலுள்ள புறப்புரிமையைப் பிடுங்கிக்கொண்டதினால் இந்த அக்கிரமத்தை நிறுத்தவும் ஆலயத்தில் பூஜை செய்யவும் அதற்காகக் கோயிலுக்குள் போகவும் ஒவ்வொரு இந்துவும் உரிமை பெறச்செய்யவும் இந்துத் தலைவர்கள் முயற்சிசெய்ய வேண்டுமென்று இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

(7) தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் கமிட்டியார் கங்காணி சபைகள் ஸ்தாபித்து காங்கிரசில் ஆட்கள் சேரமுடியாமல் தடைசெய்திருப்பதையும் ஒரு கட்சியார் தம் கட்சியாருக்கு மட்டும் ஜில்லா தாலூகா கமிட்டிகளில் ஆதிக்க முண்டாகுமாறு சூழ்ச்சி செய்து வருவதையும் இம்மகாநாடு கண்டிக்கிறது.

(8) வகுப்பு வேற்றுமைகளும் ஜாதி வித்தியாசங்களும் இருக்கும்வரை எல்லா சமூகத்தாருக்கும் உத்தியோகமும் மற்றும் பதவிகளும் சமமாகக் கிடைக்கும்படி தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தமகாநாடு தீர்மானிக்கிறது.

(9) சேலம் ஜில்லாவில் ஒரு பகுதிக்கு மேட்டூர் தேக்கத்திலிருந்து நீர்ப்பாசனத்துக்காக தண்ணீர் விட்டுக்கொடுக்கவேண்டுமென்று இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

(10) கிராமங்களில் அதிகப்படியான பாடசாலைகளும் சித்த வைத்திய சாலைகளும் ஸ்தாபிக்கவேண்டியதும் எல்லா ஆரம்பப் பள்ளிக் கூடங்களிலும் ஆதிதிராவிடக் குழந்தைகளுக்கு இலவசமாக கல்வி கற்பிக்கவேண்டியதும் மிகவும் அவசியமென்று இந்த மகாநாடு சர்க்காருக்கு வற்புறுத்துகின்றது.

முதன் மந்திரியும் நியமன ஊழலும்.

ஒரு நகர சபைக்கு கவுன்சிலர்களைத் தேர்ந்தெடுப்பதென்பது பொது ஜனங்களின் பொருப்பு, பெரும் பான்மையான பொது ஜனங்களால் சுயநலமற்ற பொது நல உழைப்பாளியென்று நன்கு மதிக்கப்பட்டவர்களையே கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுப்பது வழக்கம். ஒரு வார்டில் இரண்டு பேர்கள் அபேக்ஷகர்களாய் நின்றால் நின்றவர்களுக்குள் யார் பொது ஜனங்களுடைய பெரும்பான்மையான அபிமானத்தைப் பெறுகின்றார்களோ அவர்களே கவுன்சிலுக்கு உரித்தானவர்களென்பது எவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயம். யார் ஒரு வார்டில் அபேக்ஷகராக நின்று பெரும்பான்மை ஓட்டுகளால் தோற்கடிக்கப் படுகிறார்களோ, அவர்கள் பொதுநல மற்றவர்களென்றும், பொது ஜனங்களால் சந்தேகிக்கப்பட்டவரென்றும் லாயக்கற்றவரென்றும் நம்புவது வழக்கம். இப்படியிருக்க நமது முதன்மந்திரிய்வர்கள் ஒரு புதிய வழியைக் கண்டு பிடித்திருக்கிறார். அதாவது அந்த நகர சபையில் எவர் அபேக்ஷகராக நின்று தோல்வியடைகிறாரோ, அத்தகைய தோல்வியடைந்த நபர்களின் கூட்டத்தினரையும், அக்கூட்டத்தின் ஏஜண்டையும் திருப்தி செய்யும் வகையில் முதன் மந்திரியவர்கள் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தோல்வியுற்றவர்களையே பொருக்கி எடுத்து நியமனம் செய்வதென்பது நமது முதன் மந்திரியவர்கள் புதிதாகக் கண்டுபிடித்த பாடமாகும். ஒவ்வொரு வார்டிலும் அபேக்ஷகர்களாக நின்று தோற்றவர்களும் ஜெயித்தவர்களுமாகவே ஒரு கவுன்சிலில் சேர்ந்தால் அந்தக் கவுன்சில் எப்படி ஒற்றுமையாயும்திறமையாயும்நடக்குமென்பதைப்பொது ஜனங்களே கவனிக்கவேண்டும். பெருவாரியான ஓட்டர்களால் நிராகரிக்கப்பட்டவரை நியமிப்பதானது பொது ஜனங்களுடைய நோக்கத்திற்கு விரோதமாவது மன்றி கவுன்சிலிலும் கக்ஷி சண்டைகள் வளர்ந்துகொண்டே வர வழியேற்பட்டு விடுகிறது. நமது மந்திரியவர்களின் கோவை நகரசபை நியமனத்தை சற்று யோசித்துப்பார்த்தால் கவுன்சிலின் நன்மைக்கு ஆள் சேர்த்தாரா அல்லது கக்ஷிச்சண்டைக்கு ஆள் சேர்த்தாரா என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. கோவை நகர சபைக்கு நியமிக்கப்பட்டவர்களே மந்திரியின்நியமனயோக்கியதையைக்காட்டுவதற்கு உதாரணமாக விளக்குகின்றனர். அதாவது ஒரு ஸ்ரீமான் யேகப்ப செட்டியார் என்பவர் கோவை நகரசபைக்கு நியமனம் பெற்றுள்ளார். இவரைப்பற்றி சிறிது யோசிப்போம். இவர் ஒரு நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டியார். இவ்வூரில் வட்டிக்கடை வைத்திருக்கின்றவர். திரவியம் படைத்தவர். இத்தகைய பெரியார் சென்ற தேர்தலின் போது இவர் குடியிருக்கும் வார்டிலேயே ஸ்ரீமான் முத்துசாமி பிள்ளையவர்களுடன் போட்டியாக நின்று பெரும்பான்மை ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டவர். தனது வார்டிலேயே நின்று பொது ஜனங்களுடைய ஆதரவில்லாமல் தோல்வியுற்ற இவர் அதே சபைக்கு நியமனம் பெற்றுள்ளதானது மிகவும் பொருத்தமற்றதென்பது எவரும் ஒப்புக்கொள்ளத்தக்கது. தவிர ஸ்ரீமான் லோனப்பன் என்ற நியமனம் பெற்றவரைப்பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. அதாவது இவரும் சென்ற தேர்தலில் 6-வது வார்டில் அபேக்ஷகராக நின்று பெரும்பான்மையான ஓட்டுகளால் சரியானபடி தோற்கடிக்கப்பட்டவர். இவரும் தமது சிபார்சுப் பலத்தால் இவ்வருஷம் நியமனம் பெற்றுள்ளார். இன்னும் இரண்டு நியமன ஸ்தானங்கள் பாக்கி இருக்கின்றன. அதற்கும் நமது மந்திரியவர்கள் தோல்வியுற்ற கனவான்களையே நியமனம் செய்யப்போவதாக வதந்தியுலாவுகிறது. மந்திரியவர்கள் இனி நியமிக்கப் போவதிலாவது கவுன்சிலின் நன்மைக்கு ஆள் சேர்க்கப்போகிறாரா அல்லது கக்ஷிச்சண்டைக்கு ஆள் சேர்க்கப்போகிறாரா என்பதை அறிய பொது ஜனங்கள் ஆவலாயிருக்கின்றனர். இம்மந்திரி நியமனங்கள் செய்துகொண்டே போவதினால் ஸ்தலஸ்தாபனங்களில் கக்ஷி பிரதி கக்ஷியும் கலகமும் ஏற்பட்டு நகரசபைகளின் யோக்கியதைகள் கெடுவதற்கும் காரியங்கள் குந்தகமாவதற்கும் மந்திரிகளே காரணமாய் இருக்கிறார்கள் என்று தானே சொல்லவேண்டும்.

வேதாந்தாச்சாரி.

---

(11) பிராமணரல்லாதாரை சூத்திரர் என்றழைப்பது அவர்களுடைய கௌரவத்துக்கு கேட்டை உண்டு பண்ணுவதினால் சர்க்கார் ரிக்கார்டுகளில் 'சூத்திரன்' என்ற பதம் வழங்கக்கூடாதென்று ஒரு உத்தரவு பிறப்பிக்குமாறு சர்க்காரை, இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(12) ஹிந்துக் குடும்பங்களில் புருஷர்களைப்போலவே பெண்களுக்கும் சமமான சொத்துரிமை யளிக்கவேண்டுமென்றும் அதற்குத் தேவையான மசோதாவை சட்ட சபை மெம்பர்கள் நிறைவேற்ற வேண்டுமென்றும் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

(13) குழந்தை விவாகத்தை தடுப்பதற்காக இப்பொழுது இந்திய சட்டசபையில் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாவை இம்மகாநாடு ஆதரிப்பதுடன் அதை நிறைவேற்றி வைக்கவேண்டு மென்றும் இந்த மகாநாடு சர்க்காரையும் சட்டசபையாரையும் வேண்டிக்கொள்ளுகிறது.

(14) சிறு பெண்களுக்கு ஆலயத்தில் பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்கவேண்டுமென்றும் அதற்காக டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டியவர்கள் கொண்டுவரும் தீர்மானத்தை சட்டசபையார் நிறைவேற்ற வேண்டுமென்றும் இந்த மகாநாடு அபிப்பிராயப்படுகிறது. சுயநலக்காரரான சிலர் தப்பான வழியிலிறங்கி இதற்கு எதிரிடையாகக் கிளர்ச்சி செய்து வருவதையும் இம்மகாநாடு கண்டிக்கிறது.

சுயமரியாதையின் எதிர் ஒலி.

இராமாயணத்தைத் தொலைக்க வேண்டும்

(திரிசிரபுரம் இராவணதாசன் எழுதுவது.)

இராமாயணம் என்ற சொல்லைக் கேட்டவுடன் நமது தமிழ் மக்கள் பக்தியினால் மெய்மறந்து கூத்தாடுகிறார்கள். இது அவர்களின் அறியாமையேயாகும். இராமன் பார்ப்பனர்கள் சொன்னபடியே ஆடி பார்ப்பனரல்லாத தமிழ் மக்களைத் துன்புறுத்தி வந்தவனானதால் அவனை "விஷ்ணு" வின் அவதாரமென்று புகழ்ந்து, ஒவ்வொரு புராணங்களிலும் பாடிவைத்ததோடு இராமாயணம் என்னும் ஒரு பெருங்காவியத்தையும் பாடிவைத்திருக்கிறார்கள். இந்த இராமன் இராட்சதர்களைக்கொன்றான் என்று சொல்லும் இடங்களெல்லாம் தமிழ் மக்களையே கொன்றதாகச் சரித்திர ஆராய்ச்சியால் விளங்குகிறது. பசுவைக் கொலை செய்து அதன் மாமிசத்தை உண்டு வந்த ஆரியப் பார்ப்பனர்களை அடியோடு தொலைப்பதற்கு அரும்பாடு பட்ட சிவகாருண்ய மூர்த்தியாகிய இராவண வீரனை இராமாயணத்தில் (இப்பொழுது வைக்கம் வீரரை தூற்றுவதைப் போல்) இராட்சதனென்றும், நாஸ்திகனென்றும், படுபாவி யென்றும் பலவிதமாகத் தூற்றி எழுதியிருப்பதுபோதாமல், இராமனுடைய அரசாட்சியின்போது ஒரு பார்ப்பானுடைய மகன் இறந்து போனதற்குக் காரணம் "ஒரு சூத்திரன்" தவம் செய்ததுதானென்று அச்சூத்திரனை (தமிழனை) வெட்டிவிட்டதாகவும் எழுதியிருக்கின்றது. நல்ல சுத்தரத்தமுள்ள எந்த தமிழ் மகனும் ஒரு ஜாதிக்கு ஒரு சட்டமாகவுள்ள அதர்ம இராமாயணத்தை இனி கையில் தொடக்கூடாது. அவற்றை எரித்து சாம்பலாக்கி குப்பைத் தொட்டியில் போடவேண்டியது. அப்படிச் செய்யாதவர்கள் பெரிய குலத்துரோகிகள் ஆவார்கள் என்பது எனது கண்டிப்பான எண்ணம். சுயமரியாதை வாழ்க.

கரூர் நகரசபைத் தலைவர் தேர்தல்.

நாளது நவம்பர் 2உ நடந்த நகரசபைத் தலைவர் தேர்தலில் அதிக வாக்குப் பெற்ற ஸ்ரீமான் V. குப்புராவ் அவர்கள் தலைவராகவும் ஸ்ரீமான் C. P. துரைஸாமி முதலியார் உப தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்களென்று கௌன்சிலர் ஸ்ரீமான் E. M. கிருஷ்ணஸாமி அவர்கள் தெரிவிக்கிறார்.

பார்ப்பனீயம் ஒழிந்த திதி.

பெரியகுளந் தாலூகா லக்ஷ்மிபுரம் என்ற கிராமத்தில் ஸ்ரீமான் பா. ரா. ஸ்ரீனிவாசக நாயுடு அவர்கள் தம் தகப்பனார் திதியைப் பார்ப்பனப் புரோகிதனை நீக்கி சில வாலிபர்களைக்கொண்டு வெகு விமரிசையாய் 2-11-27ல் நடத்தினர். அச்சமயம் சுமார் 40 50 ஜனங்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. பிராமணீயம் வீழ்க! சுயமரியாதை வாழ்க! நா. போத்திராஜுலு நாயுடு.

$ 500 இனம்! $ 500 இனம்!!

சதாநந்த யோகீஸ்வரருடைய **மகா வீரியவிருத்தி லேகியத்தை**

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையேன்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவரேனும் செய்துகோடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (ரிங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பேனியிலிருந்து வெகுமதியாய்க் கோடுக்கப்படும்.

ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி விலையுயர்ந்த பொருள்களாகிய அப்ரேக், அம்பர் கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிதமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பஸ்பவகைக்களையுங்கொண்டுசெய்யப்பட்டது இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகயிருந்தும், இதை தனவந்தர் முதற் கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு இதன் அபூர்வ சக்தியையும், துரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை கெட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசத்தி பலவீனம் முதலியவைகளை போக்கி சுறு சுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும். இதுவுமன்றி சித்திரையில் நீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரிட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுர் வேதவைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனனி வைத்திய பண்டிதர்களும் இன்னும் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.

உறுதிமோழிப் பத்திரம்.

டாக்டர் M. சோட்டாசிங் L. M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோஸ் டிவிஷனல் எஞ்சினீர் G. P. O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்பரரின் பிரதம சிஷ்யரும். வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் சாது சோமசுந்திர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான் இ. வீராசாமி நாயுடு அவர்கள்
ஆயுள்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுள்வேத சித்தவைத்திய பூஷணம்.
சு. லாஸரஸ் பண்டிதன்
ஸ்ரீமத் T. R, மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணாக்கருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை.

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான். ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு. உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் $ 3-75.

பிராஞ்ச் ஆபீஸ்:— 17, சைனா ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்த ரசம் கம்பேனி, 251 சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லது மருந்து அனுப்பப்படமாட்டா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மதச் சண்டை.

தென்னிந்தியாவில் வருணாசிரம சண்டையும் வட இந்தியாவில் ஹிந்து முஸ்லீம் கலகமுந்தான் தேசத்தின் முன்னேற்றத்திற்கு இடையூறுகளா யிருக்கின்றன- இவைகள் இரண்டும் உள்ள வரையிலும் சுயராஜ்யத் துறையில் உழைக்கும் உழைப்பெல்லாம் வீண் உழைப்பே யாம் இச்சண்டைகளை சமாதானம் செய்ய காங்கிரஸ் தக்க பிரயத்தனம் செய்யவேண்டும். ஒற்றுமை ஏற்படும் வரையிலும் மற்ற விஷயங்களைக் காங்கிரஸ் நீக்கிவைப்பினும் குற்றமாகாது என்பதே எனது துணிபு-

சேலம் ஜில்லா.

நமது ஜில்லாவின் நிலைமை மிகவும் பரிதாபகரமானது, நான்கு திக்குகளிலும் மலைகளால் சூழப்பட்டுப் பெரியதோர்கோட்டை போல் அமைந்துளது- நதிகள் பல விருப்பினும் பயனில்லை. "தண்ணீருங் காவிரியே" என்று பெரியோர்களால் போற்றப்படும் காவிரிநதி இந்த ஜில்லாவினிடையே ஓடியும் அதனால் நமக்குப் பயனொன்றுமில்லை. ஆகவே நம் ஜில்லாவில் ஆற்றுப்பாசனம் இல்லை என்றே சொல்லலாம். ஏரி கிணறு இவைகளின் உதவியைக்கொண்டே வேளாண்மை நடந்து வருகிறது- வானம் சுருங்கில் தானம் சுருங்கும் என்பது நம் ஜில்லாவிற்குப்பெரிதும் பொருத்தமாயிருக்கிறது. மழையில்லையேல் பஞ்சம் உண்டாவது நிச்சயம்.

நமது ஜில்லா பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு வந்தவுடன் அதாவது 1792-ம் வருஷத்தில் கொடிய பஞ்சம் உண்டாகியது, பிறகு முறையே1833, 1845, 1857, 1866, 1877 1892-ம் வருஷங்களில் பஞ்சம் ஏற்பட்டிருப்பதைக் கவனித்தால் சற்றேறக்குறைய பத்து வருஷங்களுக்கொருமுறை பஞ்சம் உண்டாகி சேலம் குடி மக்கள் துன்புறுகிறார்களென்பது குன்றின் மேலிட்ட தீபம் போல் விளக்குகின்றது- 1832 ம் வருஷத்துப் பஞ்சத்தில் நூற்றுக்கு 28 வீதம குடிகள் உயிர் துறந்தனர், ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் கால் நடைகள் சேதமாயின- 1877 ம் ஆண்டில் உண்டாகிய பஞ்சத்தில் நாடெங்கும் திருட்டு, கொலை, கொள்ளை முதலியன அதிகப்பட்டு 6688 பேர் சிறையிடப்பட்டார்கள், 1924 ம் வருஷத்திலிருந்து இவ்வருஷம் வரையிலும் மழையில்லாததினால் ஏற்பட்ட கஷ்டங்களை நீங்கள் நன்கு அறிவீர்களாதலால் அதன் கொடுமைகளைப் பற்றி நான் எடுத்துக்கூறுவதுமிகையாகும்- திக்கற்ற ஏழைமக்கள் அன்னிய நாடு நோக்கிச்சென்றனர். இறைவன் திருவருளால் இவ்வருஷம் சில இடங்களில் மழை பெய்தமையால் ஜில்லா காலியாகாமல் இப்போதைய நிலைமையில் இருக்கிறது.

மேட்டூர் தேக்கம்.

நம் ஜில்லாவின் பரிதாப நிலையைக்கண்டு கவர்ன்மெண்டாருக்குக் கருணை தோன்றின் மேட்டூர் தேக்கத்தால் நம் ஜில்லாவுக்குச் சில நன்மைகள் ஏற்படக்கூடும்- இந்த முறையில் நீங்கள் கவர்மெண்டாரை மன்றாடிக் கேட்டுக்கொள்வது மிகவும் அவ

சியம்- லண்டன் மாநகரத்து மக்களுக்குக் குடிக்குந்தண்ணீர் 300 மைல் தூரத்திலிருந்து கொண்டுவரப்படுவதாக கேள்விப்படுகிறோம். மேலும் மணற் காடான சஹாராபாலைவனத்தைச்சீர்திருத்தி பருத்தி பயிர் செய்யும் பெரியதோர் திட்டம் தயாராகி வருகிறதாகத்தெரிகிறது. இப்படியெல்லாமிருக்க மேட்டூர் தேக்கத்திலிருந்து சேலம் ஜில்லாவிற்குத் தண்ணீர் கொண்டுவருவது கவர்மெண்டாரின் கருணையிருந்தால் அசாத்தியமானதல்ல- ஆதலால் சேலம் ஜில்லாவின் குறைகளைப் போக்கி குடிகட்குச் சுகவாழ்வு அளிக்கும்படியாக கவர்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளும்படிக்கு உங்களனைவரையும் மறுபடியும் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

சகோதரிகளே சகோதரர்களே! எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி இங்கு விஜயம் செய்த உங்களனைவருக்கும் வரவேற்புக் கழகத்தின் சார்பாகவும் இந்த மகா ஜனங்களின் சார்பாகவும் என் மனமார்ந்த வந்தனங்களைச் செலுத்துகிறேன்.

சுபம். சுபம். சுபம்.

கோவை சேர்மன் தேர்தல்.

நாளது நவம்பர் 7உ ஸ்ரீமான் வி- அருணாசலம் செட்டியாரின் தலைமையில் கோயமுத்தூர் முனிசிபல் சேர்மன் தேர்தலுக்காக ஒரு கூட்டம் நடந்தது. ராவ்பகதூர் ரத்ன சபாபதி முதலியார் அவர்கள் மூன்றும் முறையாக சேர்மன் பதவிக்கு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

"குடி அரசு" நிருபர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா. மானேஜர்,

"குடி அரசு"

அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

20 சாம்பிள் பாக்கெட்	ரூ. 2—0—0
10 ,, ,,	ரூ. 1—4—0
நாட்டுக் காய்கறி 20	ரூ. 2—8—0

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹார்டிகல்சர் தோட்டம், சேலம்.

பழநி சி. எம். சாமி.

குருதாம்பரபஸ்பம்

சகல வியாதிகளுக்கும் கைகண்டது,

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டது. ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100வேளைபஸ்பமும் அனுப்பானமும் விலை ரூ. 50. 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும்விலை ரூ. 25.ஏழைகளுக்குப்பாதிவிலை

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம் பெற்று போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒண்ணரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானான் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்னுப்பக் கோருகிறேன்.

A M. துரைசாமி, 80-நிர் மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேதவைத்திய ஆசிரியர்,

C.மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S.I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை.

மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை, அநுபானமில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சிந்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குளோர் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தேன ஜகத் பிரசித்திபெற்றது. துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்த்ரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது. எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும்ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும் கைகண்ட மருந்து

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—**மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்**

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.